மகாகவி கம்பர்

இயற்றிய

# திருக்கை வழக்கம்

மூலமும் குறிப்புரையும்

வித்வான். C. ஜெகந்நாதாசார்யர்,

M. [illegible] (Hist), M. A. (Tamil), L. T., P. O. L., Dipl. Geog.

([illegible] றைத் தலைவர், விவேகாநந்தர் கல்லூரி, மயிலை)

எழுதிய குறிப்புரையுடன்

வை. மு. நரசிம்மன்

வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் கம்பெனி,

17, தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை-5.

கீலக ௵
புரட்டாசி ௴ }   1968   [விலை ரூ. 0—50

முதற் பதிப்பு, 1968.

கலாநிதி விலாஸமான
பிரம்மஸ்ரீ. R. விசுவநாதய்யர்க்[illegible]ப்
பணிவுடன் சமர்ப்பிக்கப்[illegible]
தாஸன்
C. ரங்கநாதய்யர்.
12.10.68

அரவிந்தா பிரிண்டர்ஸ், 19, கிஷ்டப்ப மேஸ்திரி தெரு, சென்னை-3.

# திருக்கைவழக்கம்

## முகவுரை.

மகாகவியாகிய கம்பர் வேளாண்பெருமக்கள்மேற் பாடிய ஏரெழுபது என்னும் நூல் அரங்கேறிய பின்னர், உடனே திருக்கைவழக்கம் என்னும் இந்நூலையும் பாடினர் என்பது விசதம். ஏரெழுபதுக்கு உரைகண்டதுபோல் இந்நூலுக்கும் உரைகண்டு வெளிக்கொணரவேண்டும் என்னும் அவாவினாலுந்தப் பட்டு, திருவாளர் வை. மு. நரசிம்மன் (பொறியியல் வல்லுநர்) அவர்கள் என்னிடம் உரைகாணும் அப்பணியை ஒப்படைத்தனர்: யானும் குறிப்புரையாக எழுதியுள்ளேன். இந்நூலின் கண்ணிகள் மேனோக்குக்கு எளியனபோலத் தோன்றினும், பலவிடயங்களை யும் கதைக்குறிப்புக்களையும் பொதிந்துவைத்துக்கொண்டு பொருட் செறிவுடையனவா யிருத்தலை இக் குறிப்புரை பயில்வோர் காண லாம். இந்தக் குறிப்புரை வரைதற்குப் பெரிதும் துணையாயிருந்த நூல் தொண்டைமண்டல சதகத்திற்குப் பிச்சையப்ப முதலியார் குமாரர் [illegible]கஸ்தியப்ப முதலியார் செய்த உரைநூலாகும். இது 1887[illegible]ிப்பிக்கப்பட்டதாகும். இந்தநூலை மிகக் கருணை யுட[illegible]ய மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநா தையர் [illegible]ல்நிலையத்தார்க்கும், அதன் க்யூரேடர் கலாநிதி வில[illegible]ணி. பிரம்மஸ்ரீ. ரா. விசுவநாதய்யர். M. A., B. O. L., அவர்களுக்கும் தலையல்லால் கைம்மாறிலேன்.

இக்குறிப்புரையில் அடியேனுக்குத் தெரிந்த விஷயங்களை மட்டும் வரைந்துள்ளேனாதலின், அடியேனுக்குப் புலப்படாத அரியபெரிய விஷயங்களையும் எடுத்துத் தெரிவிப்பாராயின் பெரு மகிழ்வோடு நன்றிபாராட்டி மறுபதிப்பில் அவ்விஷயங்களை வெளி யிட்டு உலகோர்க்குப் பயன்படுமாறு செய்யவும் முயல்வேன். இந்தக் குறிப்புரையிற் சிறப்புக்கள் காணப்படின் அவை என் ஆசிரியப் பெருந்தகையின் ஆசியினாலேற்பட்டவை யெனவும், குற்றங்கள் காணப்படின் அவை என் மந்தபுத்தியாலேற்பட்டவை யெனவும் கொண்டமையுமாறு வேண்டுகின்றேன். தொண்டை மண்டலத்தைச் சேர்ந்தவனாதலின், இந்நூலுக்கு உரைகாணலிற் பெருமிதமடைந்தேன்.

எனது காலத்தையெல்லாம் வீணாக்காமல் தமிழ்த்துறையிற் செலுத்தி எனக்குத் தோன்றாத்துணையாய் நின்று திருவருள் புரியும் அருட்பெருங்கடலை அநவரதமும் எண்ணியெண்ணி வாழ்த்துகின்றேன்.

கீலக ஞு
புரட்டாசிமீ
1968
திருவல்லிக்கேணி

ஸி. ஜெகந்நாதாசார்யர்.

# திருக்கைவழக்கம்.

திருக்கைவழக்கம் என்பது வேளாண் பெருமக்களின் கொடைக் குணத்தைச் சிறப்பித்துக் கூறும் ஒரு நூலாகும். ஏனைய குணங்கள் சிறப்பிக்கப்பட்டிருப்பினும் பெரும்பான்மை நோக்கிக் கொடைக்குணம் விதந்தோதப்பட்டது என்க. திருக்கையினது வழக்கம் எனப்பொருள்படுதலின், ஆறும்வேற்றுமைத் தொகை. 'திரு' என்பது மங்கலங்குறிப்பதோர் அடைமொழியாதலின், கையின் சிறப்பினைக் காட்டவந்தது. வழக்கம் - ஈகை; வழங்குதல் என்ற சொல்லினடியாப் பிறந்தது.

இந்நூலை இயற்றியவர் கம்பர். வேளாளரைச் சிறப்பித்து ஏரெழுபது பாடியதையொட்டி உடனே, அதன் பின்பு இத் திருக்கைவழக்கத்தையும் பாடியுள்ளார்: இதனை "பாவலர் தாம், ஏரெழுபதோதி யரங்கேற்றுங் களரியிலே, காரிவிடநாகங் கடிக் குங்கை" என்று திருக்கைவழக்கத்தில் கூறியதால் தேற்றமாயுண[illegible] இந்நூல் சைவப்பற்றுடைமை தோன்றக் கூறப்பட்டு[illegible] சிலையெழுபதுக்கு ஈட்டியெழுபது போலே, [வே[illegible]] திருக்கைவழக்கத்துக்குச் [செங்குந்தர்] திருக்கை வழக்க[illegible] உண்டு. அதனைப் புகழேந்தி பாடினர் என்ப. இந்தத் திருக்கைவழக்கம் 59 கண்ணிகளைக் கொண்டு, வெண்டளையான் வந்த கலிவெண்பாகும்.

## நூல்.

கங்கை குலந்தழைக்கக் காட்டும் பெருங்கீர்த்தி
மங்கை பிரியாமல் வாழுங்கை—திங்களணி
எம்பிரா னெம்பெருமா னிந்த்ராதி பர்க்கரிய
தம்பிரா னுக்குரைத்த சந்தனக்கை—யம்பொன்
வளைவாரி வையகமும் வானகமும் போற்ற
முளைவாரி வந்த முழுக்கை—கிளைவாழக்
கச்சித் தலத்தரனைக் கல்லா லெறியமறந்
தெச்சிற் றயிர்ச்சோ றெறிந்திடுங்கை—பச்சைமிகு
தேமா வடுக்கமரிற் சிந்திற்றென் றேகழுத்தை
யாமா மெனவே யரிந்திடுங்கை—வாமமறை
ஓதுபுகழ் நாயனுட னூரன் புறகென்றே
மோதுதடி கொண்டு முடுக்குங்கை—தீதகல
அஞ்செழுத்தே யொன்ருகி யப்பரெனத் தோன்றியரன்
செஞ்சரணத் தேபூசை செய்யுங்கை—வஞ்சியர்பாற்
றூதரனைத் தான்விடுத்த சுந்தரனைக் காணுமற்
பேதமறத் தன்வயிறு பீறுங்கை—பூதத்தின்
மிக்க புலவனுக்கா வேசிமனை மட்டாகத்

தக்க சிவிகைகணை தாங்குங்கை—மைக்கடுவாய்
மூக்கிற் புகைபுரிந்த மூதரவின் வாயிடத்து
நீக்கியகை நாக்கதனி னீட்டுங்கை—யாக்கமுடன்
ஏதமற்ற கீர்த்தியைக்கொண் டேட்டகத்தி லேயடிமைச்
சாதனமிட் டேகொடுத்த தங்கக்கை—மேதினியிற்
சூலி முதுகிற் சுடச்சுடவப் போதுசமை
பாலடிசி றன்னைப் படைக்குங்கை—சாலவே
நாணந் தராம னடுங்காமற் கூசாமற்
பாணன் பிணத்தைப் பரிக்குங்கை—காணவே
தண்டமிழோன் றன்மனத்திற் சந்தேகந் தீரக்கூழ்
உண்டவயிற் றைப்பீறி யூற்றுங்கை—கண்டளவில்
நீலிதனக் கஞ்சி நின்றவணி கேசனுக்காக்
கோலி யபயங் கொடுக்குங்கை—யாலமெனும்
வன்னி யிடைமூழ்கி வானோர் பழிகழுவிக்
கன்னிதனை யேமணந்த காட்சிக்கை—துன்னுமொரு
பேருலகை யெல்லாம் பிழைப்பிக்கு மோர்கொழுவின்
கூரிலொரு வன்கழுத்தைக் குத்துங்கை—பாரறிய
வீறு பெறும்பறையன் வீயாம லோர்கலத்திற்
சோறு பிசைந்துண்ட சுடர்மணிக்கை—யாருத்
தொடையி லெழுசிலந்தி தோற்றுவிக்கப் பட்டின்
புடைவை கிழித்த பெருங்கை—கடல்சூழ்ந்த
பார்பூட்டு மன்னர் பரிகரிபூட் டக்கதிரோன்
றேர்பூட்ட வேர்பூட்டுஞ் செம்பொற்கை—வீரமதன்
ஐங்கோ ரெடுக்க வணைகோ லெடுக்கவுழும்
பைங்கோல் பிடிக்கும் பதுமக்கை—யிங்கிதமாஞ்
சீர்படைத்த பூபாலர் செங்கோல் பிடிப்பதற்குப்
பேர்படைத்த மேழி பிடிக்குங்கை—கார்படைத்த
மிஞ்சுமதி கீர்த்தியைப்போன் மேதினியெல் லாந்தழைக்கச்
செஞ்சாலி நாற்றைத் தெளிக்குங்கை—யெஞ்சாமல்
வெள்ளைக் களைகளைந்து வீறும் பயிர்தழைக்கக்
கள்ளக் களைகளைந்த கற்பகக்கை—வள்ளுறையும்
விற்போர் மதகரிப்போர் வெம்பரிப்போர் வெற்றிப்போர்
நெற்போர் முதற்போர் நெரித்திடுங்கை—கற்பகம்போன்
மேழிக் கொடிசிங்க வெற்றிக் கொடிகுயிலின்
வாழிக் கொடியே மருவுங்கை—நீளுலகில்
ஆதுலர்க்குச் செம்பொ னளிக்குங்கை யாகமங்கள்
வேத புராணங்கள் விரிக்குங்கை—நீதிநெறி
மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தருமந் தழைக்குங்கை—யானதமிழ்
கல்லார்க ளென்னுமற் கற்றோர்க ளென்னுமல்
எல்லாரை யுங்காத்தீ டேற்றுங்கை—வல்லமைசேர்
மைம்மா முகிலுலகை வாழ்விக்கு மேன்மைபோற்
கைம்மா றிலாதளித்த கற்பகக்கை—சும்மையார்
ஊருணி நீர்போ லுலகத் தவர்க்கெல்லாம்
பேரறிவா லீயும் ப்ரதாபக்கை—பாரில்

உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
கொடுக்க விசைந்த குளிர்க்கை—யிடுக்கணினுன்
மாமறையோர் மன்னர் வணிகர் முதலாகத்
தாமலையா மற்கொடுத்துத் தாங்குங்கை—தேமருவு
நாவிற் புகழ்கம்ப நாடற் கடிமையென்றே
மாவைக் கரைத்துமுன்னே வைக்குங்கை—பாவலர்தாம்
ஏரெழுப தோதியரங் கேற்றுங் களரியிலே
காரிவிட நாகங் கடிக்குங்கை—பாரறியச்
சங்கையிட்டுத் தள்ளாமற் றன்சோற்றை வந்தவர்க்குப்
பங்கையிட் டிரட்சித்த பங்கயங்கை—பொங்கமொடு
செம்பொன் விளைகளத்தூர் செந்நெல் விளைந்ததனை
நம்பிமறை யோர்க்களித்த நாணயக்கை—யம்பொன்
விளைபயிரைப் பார்த்து விரைகால் புலத்தை
வளையமதி லிட்டு வருங்கை—களமதனில்
ஏற்கவந்த வாதுலருக் கில்லையென்னு மற்செம்பொன்
கார்க்கையினுன் முக்கையிட்ட கற்பகக்கை—தீர்க்கமதாத்
திருப்பருத்திக் குன்றிற் சிவனு லயங்கள்
விருப்புடனே கட்டுவித்த மெய்க்கை—திருப்புகழை
எண்ணை யெழுத்தை யிசையை யிலக்கணத்தை
[illegible]மைபெற வுண்டாக்கும் வாகுளகை—பண்ணமைந்த
[illegible]ொரு நான்கினையு மிக்கதமிழ் நாலடியால்
[illegible]ரைத் தேகருணை யோங்குங்கை—பூதலத்திற்
[illegible]னெச்சிற் படுமாங் கனியையெடுத்
தாவலுட னன்று வருந்துங்கை—காவலவன்
மண்ணிற் கடலின் மலையிற் பெரியதென
எண்ணியெழு திக்கொடுத்த வேற்றக்கை—திண்ணமதாய்
வையகமெங் குந்தேடி வந்ததமி ழோன்புகழச்
செய்யமுடி யைக்கொடுத்த செம்பொற்கை—துய்யபுகழ்
அட்டதிக்கு மெண்கீர்த்தி யாயிரத்தெட் டானைதனை
வெட்டிப் பரணிகொண்ட வீரக்கை—திட்டமுடன்
பொன்னு லமுதும் பொரிக்கறியுந் தான்கொணர்ந்து
நன்னு வலர்க்களித்த நாணயக்கை—முன்னுள்
மனக்கவலை யுற்ற வணிகன்முன் னேநின்று
தனைக்கா வெனக்கேட்ட தங்கக்கை—கனக்கவே
அன்றீன்ற நாகெழுப தானவெரு மைத்திறத்தைக்
கன்றேடு நல்குங் கடகக்கை—வென்றிதரும்
ஓரானை நூரு யிரக்கலநெல் லோர்கவிக்குச்
சீராக நல்குந் தியாகக்கை—பேரியலைச்
சாற்றுமொட்டக் கூத்தன் சரசகவி சொல்லப்பா
லாற்றுநீர் காற்கொணர்ந்த வாண்மைக்கை—நேர்த்திபெற
வண்டமிழோன் ருனுதைத்த வாகுளகா லுக்குப்பொன்
வெண்டயமிட் டேவணங்கும் வெற்றிக்கை—புண்டரிகக்
கையாற் புலவன் கனகமுடி மேற்குட்டச்
செய்யாழி பண்ணியிட்ட தீரக்கை—நொய்ய
எறும்புக்கு மாஸ்பதந்தா னில்லையென்ற மட்டிற்

றிறம்புக்க யானைதருஞ் செங்கை—பறம்புதனில்
எண்ணு யிரமுனிவர்க் கேற்றபடி யப்படியே
பண்ணுக் கொடுக்கும் பராக்ரமக்கை—விண்ணுடர்
கூர்த்த புகழுண்ட கோளமள வும்படர
நாற்றிக்கு மேருவினி லுட்டுங்கை—சீர்க்குகனை
ஆதார மானவனை யைங்கரனைச் சங்கரனைப்
பாதார விந்தம் பணியுங்கை—நீதி
நடக்கை யிருக்கை நகைக்கை மிடிதீர்க்கை
கொடுக்கை செழுங்கை குளிர்க்கை—தொடுத்ததெல்லாஞ்
சீராக வுண்டாக்குஞ் செங்கைப் பெருங்கருணைக்
காராளர் கற்பகப்பூங் கை.

## உரைத்தொடக்கம்

கங்கை குலந்தழைக்கக் காட்டும் பெருங்கீர்த்தி
மங்கை பிரியாமல் வாழுங்கை—

(குறிப்புரை):— கங்கைகுலம் - வேளாண்மரபு. [illegible]வளாளர் கங்காகுலத்தினர் எனப்படுதலை "மந்தாகினியி[illegible]வணி சங்கத்தின் மாண்டொருவன், மந்தாகினியுற்ற [illegible]புக்கு வணங்கிநின்று, மந்தாகினிக்கு மகவாகக் கேட்ட [illegible]டுப்ப, மந்தாகினிக்கு மரபானதுந் தொண்டைமண்டல[illegible] என்ற தொண்டைமண்டலச்சதகச் செய்யுளாலும், "கங்கைபெறுங் காராளர்" என்ற ஏரெழுபதினுலும் தெளியலாம். கங்கை புராணத்து வேளாளர் உற்பவச்சருக்கத்து "மஹாதேவ சிரோ கங்கா மோட்சார்த்தி சகராந்தகா, பூமிபாலன கர்த்தவ்யம் கங்காபுத்ராச்சகர்ம்மணு, வம்சோத்பவந்து புத்ராணும் விஷ்ணு பாத ஜலோத்பவம், கங்காபுத்ர விவாஹேச கல்யாணம் மங்களம் சுபம்" என்று கூறப்பட்டுள்ளதுங் காண்க. தழைக்கக் காட்டுங் கை, கீர்த்திமங்கை பிரியாமல் வாழுங்கை எனத் தனித்தனி இயையும்: தழைத்தற்குக் காரணம் - கீர்த்திமங்கை நீங்காது வாழ்தலாதல். கீர்த்தி மங்கை - புகழ்மகள். 'கீர்த்தி' என்ற வடசொல் அந்தப்பாஷையிற் பெண்பாலாதலால், 'மங்கை' என்றது. "புகழ்மகளைத்தழுவிய கை" என்றார் கம்பர் தமது இராமாயணத்தும். "பாணியிற் கங்கைநதி மலையினிற்கைலைமலை பாரழகினிற் றண்டகம், பழமொழியிலெளவைசொல் லரசரிற் சேரமான் பத்தியிற் சிறியதொண்டன், காணியிற் றொண்டை யாம் புகழில்வேளாளர்புகழ் கான்முளையினிற் பகீரதன்" என்ற தனிப்பாடலில் வேளாளர் புகழைச் சிறப்புற எடுத்தோதி யிருத்தல் காண்க. மிக்க புகழுடையார் வேளாளர் என்பது தேர்ந்த கருத்து. (1)

—திங்களணி

எம்பிரான் எம்பெருமான் இந்த்ராதி பர்க்கரிய
தம்பிரா னுக்குரைத்த சந்தனக்கை—

(கு - ரை.) 'திங்களணி' என்ற அடை அடைக்கலம் புகுந்தாரை ஆதரித்துச் சிறப்பித்தல் காட்டுவது. பிரான், பெருமான், தம்பிரான் என்பன ஒருபொருளின்மேல் வந்த பலபெயர்கள்: சிவபிரானுக்காவன. 'எம்' என்றது அடியவர்க்கெளியனாந்தன்மை காட்டும். தேவேந்திரர்க்கும் அரியவன் எமக்கு எளியனாயினன் என்றபடி. உரைத்தல் - தேய்த்தல். விரிஞ்சிபுரத்தில் தன்னை வழிபட்ட ஒரு வேளாளச் சிறுவனுக்காகத் தனது திருமேனியைச் சாய்த்துக்கொடுத்தருளிய சிவபெருமானுக்குச் சாத்துஞ் சந்தனமாகத் தனது முன்கையைத் தேய்த்தான் அச்சிறுவன் என்பது வரலாறு. முழுவிவரம் வல்லார்வாய்க் கேட்டுணர்க. "சாய்த்திட்டவர்க்குத் திருமேனிமுன்கையைச் சந்தனமாத் தேய்த்திட்டவர்க்கெவர்நேரென்பரால்" என்றது தொண்டைமண்டலசதகம். முன்கையைத்தேய்த்த வேளாளச்சிறானுக்கு ஒப்பாக வணிகர் பெருமானாகிய மூர்த்திநாயனாரை நினைக. (2)

—அம்பொன்

**வளைவாரி வையகமும் வானகமும் போற்ற**
**முளைவாரி வந்த முழுக்கை—**

(கு - ரை.) வாரி வளை வையகம் - கடல்சூழ்ந்த பூமி. வாரி - கடல். அம்பொன்முளை என இயைக்க. பொன்-நெல்: "பொன்னார் வயற்பூம்புகலி" என்றது தேவாரம். நென்முளைவாரி வந்தவர் - இளையான்குடிமாற நாயனாராகிய வேளாளர். வானகமும் போற்றியது-சிவனடியார் வேடங்கொண்ட சிவபிரானாகிய விருந்தினரை நள்ளிரவில் உபசரித்தமைபற்றி. இதனை "கங்குன்மீது வருமரற்கன்பொடு கன்னனேரும் முளையமுதீந்து" என்றது தண்டநாயகன் பள்ளு. இனி, மற்றொரு வரலாறும் உண்டு:—

திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப முதலியாராகிய வேளாளப்பிரபு யாசகர்க்கு ஈந்தமையால் செல்வங்குறைந்து, இனி இரப்போர்க்கு இல்லையென்பதனினும் வேற்றுதேசம் புகுதல் நலமெனத்துணிந்து ஓரிரவில் நித்திரையின்றிப் படுத்திருப்ப, அப்போது அப்பிரபுவின் வீட்டில் அவ்விரவு புலவர்கூட்டம் வந்து தங்கிப் பசிமிகுதியால் 'நம் பசிநோய்தீர எப்போது பொழுதுவிடியுமோ' என்று வாய்விட்டுச் சொல்லியதுகேட்டு, அவர் வருத்தம் பொறாமல், உடனே தன் மனைவியோடு சென்று, தம் வயலில் விதைத்திருந்த நென்முளையைவாரி அலம்பி வீட்டிற்கொணர்ந்து உணவாக்கி அப்புலவர் கூட்டத்தை உண்பித்தார் என்பதும் நினைக்கத்தக்கதே. "சென்று நென்முளையை வாரினோன் புதிய திங்கள் வெண்முளையை வாரிலான்" என்று இவ்வரலாற்றினை யுட்கொண்டு கூறினது ஆறைக்கலம்பகம். (3)

—கிளைவாழக்

**கச்சித் தலத்தானைக் கல்லா லெறியமறந்**
**தெச்சிற் றயிர்ச்சோ றெறிந்திடுங்கை—**

(கு - ரை.) கச்சித்தலம் - காஞ்சிப்பதி. இங்குக் குறிக்கப்பட்டவர் சாக்கிய நாயனாராகிய வேளாளர். சாக்கியநாயனார் 'சிவலிங்கம் கண்டபின் உண்பது' என்னும் நியமத்தினராய், அச்சிவலிங்கத்தின்மேல் கல்லையே மலராகவிட்டு அருச்சனைசெய்து வருநாளில், ஒருநாள் திருவருட்சோதனையினாலே கல்லெறிய மறந்து உணவுகொள்ளப்புகுந்தவர் 'இன்று எம்பெருமானைக் கல்லெறிந்து வழிபடாது மறந்தேனே' என எண்ணி இருக்கை விட்டெழுந்துபோய்ச் சிவலிங்கத்திருமேனியிற்படும்படி கல்லெறிய அவர் அன்பின் செயலினையும் வேட்கையினையும் கண்ட பரமசிவனார் உமையோடு விடையின்மேல் காட்சி தந்தருளினார் என்பது வரலாறு. ஈண்டு, கல்லுக்குப்பதிலாக எச்சில் தயிர்ச்சோறு என்றது - அவர் உணவுகொள்ளுதற்குச் சமைந்தாரென்பதைச் சூசிப்பிக்கும். "கல்லினால் எறிந்து கஞ்சி தாமுணுஞ் சாக்கியனார்" என்றார் அப்பர். "துன்னியமெய் யன்புடனே எழுந்த வினை தூயவர்க்கு, மன்னுமிகு பூசனையாம் அன்புநெறி வழக்கினால்" என்றபடி கல்லெறிந்ததும் பூசனையாயிற்றாதலின் "கிளை வாழ" என்றது. "அல்லாதார் கல்லென்பார் அரனார்க்கஃதலராமால்" என்றார் சேக்கிழாரும். "கொங்கலர்மாலையுங் கல்லாய் விடும் அன்பு கொண்டெறிந்தால், இங்கலராய்விடுங் கல்லானது மென்பதின்றறிந்தோம், செங்கலினாலெறிந்தே [illegible]பதஞ் சேர்வர் சங்க, மங்கையின்மேவிய சாக்கியனார் [illegible]ண்டை மண்டலமே" என்றது சதகம். கிளை-சுற்றத்தார்க்[illegible]பெயர்.

—பச்சைமிகு

**தேமா வடுக்கமரிற் சிந்திற்றென் றேகழுத்தை**
**ஆமா மெனவே யரிந்திடுங்கை—**

(கு - ரை.) இது வேளாளராகிய அரிவாட்டாயநாயனார் செயல் குறிப்பது. தாயனார் என்னும் சிவனடியார் உணவின்றிப் பலநாள் பட்டினிகிடந்ததால் பசிமிகக் கால் தள்ளாடிக் கீழே விழுந்தார்; விழுந்தபோது தாம் சிவபிரானுக்கமுது செய்யக் கையிற் கூடையில் எடுத்துச்சென்ற செந்நெல்லரிசி, நல்லசெங்கீரை, தூயமாவடு இவையாவும் கமரில் [நிலவெடிப்பில்] சிந்தின; இது கண்டு, "சிவபிரான் திருவமுது செய்தருளும் பேற்றினைப் பெற்றேனில்லை, இனி யானிருந்து என்பயன்" என்று எண்ணித் தம் கழுத்தை அரிந்துகொள்ள அரிவாளை வைக்க அத்தருணம் அவர் கையைப்பிடிக்கக் கமரினின்று உயரநீட்டிய இடக்கையும், அதனுடன் மாவடுவைக் கடிக்கும் "விடேல் விடேல்" என்னும் ஓசையும் ஒருசேர எழுந்தன; அப்போது அரிவாளினால் அரிந்த புண்ணும் உடனே மறைந்தது. ஆம் ஆம் எனவே-தாம் செய்யுஞ் செயல் தக்கதே என்பதைக் காட்டவந்தது. பச்சை - சமைத்தற்குரிய உணவுப்பொருள்; "நெடுநாள் பச்சைதேடி விருந்திட்டாய்" (ஈடு: 1, 6, 1.) "சிந்தித்தென்றே" என்றபாடஞ் சிறவாது.

—வாமமறை

**ஓதுபுகழ் நாயனுட னூரன் புறகென்றே**
**மோதுதடி கொண்டு முடுக்குங்கை—**

(கு - ரை.) வாமம் - அழகு. மறை - வேதம்: இதன்பின் மூன்றனுருபு தொக்கது. வேதத்தால் ஓதப்படுகின்ற புகழை யுடைய நாயன் - சிவபிரான்: ஈண்டு, திருவாரூர்த் தியாகேசரைக் காட்டும். நாயன் - நாயகன், தலைவன். ஊரன் - ஆரூரன், சுந்தர மூர்த்திநாயனுர். புறகு - புறம்பாவான்; [புறம்பு - தனியானது]. புறகு என்றவர் விறன்மிண்ட நாயனுராகிய வேளாளர். ஒருநாள் சுந்தரர் திருவாரூரிலுள்ள தேவாசிரிய மண்டபத்திற் கூடியிருந்த சிவனடியார்களைச் சார்ந்து வணங்கிச் செல்லாமல் ஒருபுறமாக ஒதுங்கிச்செல்வதைக் கண்ட விறன்மிண்ட நாயனுர் மனம்வருந்தி "அடியார்களை வணங்காமற் செல்லுகின்ற வன்ருெண்டன் அவ்வடியார்களுக்குப் புறகு; அவனை வலிய ஆட்கொண்ட பரம்சிவனும் புறகு" என்று கூறினுர். இதனையே சேக்கிழார் "சேணுர் மேருச் சிலைவளைத்த சிவனுர் அடியார் திருக் கூட்டம், பேணுதேகும் ஊரனுக்கும் பிரானுந் தன்மைப் பிறை சூடிப், பூணுர் அரவம் புனைந்தார்க்கும் புறகு என்றுரைப்ப" என்ருர். மோதுதடிகொண்டு முடுக்குங் கை என்றவிடத்து அறியவேண்டிய சரிதம்:—விறன்மிண்டர் இருவரையும் புறகு என்ற பின்னர், தியாகேசர் வன்ருெண்டருக்கு இரண்டாஞ் சுற்று வரவின் மதிற்சுவரையொட்டி வடக்குவாயிலில் காட்சி கொடுப்ப, அதனை[illegible]க்த விறன்மிண்டர் வெகுண்டு, 'இனித் திருவாரூரில் அடியெடுத்தும் வைப்பதில்லை' என்று சூளுரைத்து, மனைவியுடன் புறப்பட்டுத் திருவாரூரின் வடக்கே புத்தாற்றங்கரையில் பந்த லமைத்து அடியார் பூசனை முதலியவற்றில் தவருது ஒழுகிவந்தார்: இவ்வாறிருக்கும் நாளில் ஆங்குவரும் அடியார் யாராவது திருவா ரூர் என்ருல் அவரது கால்களை மழுவினுல் வெட்டும் விரதம் பூண்டிருந்தார். ஒருநாள் தியாகேசரே சிவனடியாராக வந்து 'நாம் இருப்பது திருவாரூர்' என்று கூற, அவரது கால்களை வெட்டுதற்கு மழுவுடன் நாயனுர் துரத்த, அவர் ஓட, இருவரும் திருவாரூர் எல்லையை அடைந்தனர். அப்போது சிவனடியார் "வந்தோம் இப்பால்" என்று சொல்லி நின்றனர்; தம் சபதம் நிறைவேருததுகண்ட நாயனுர் தம் கால்களைத் தாமே வெட்டிக் கொண்டார். உடனே சிவபிரான் காட்சிதந்து அருள்புரிந்தார் என்பது. தடி - மழு. (6)

—தீதகல

அஞ்செழுத்தே யொன்ருகி யப்பரெனத் தோன்றியரன்
செஞ்சரணத் தேபூசை செய்யுங்கை—

(கு - ரை.) அப்பர் - திருநாவுக்கரசர்: இவர் வேளாண் மரபினர். அஞ்செழுத்து - பஞ்சாக்கரம்; நமசிவாய என்பது. "கருவாய்க்கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்" என்ற தனுலும், "உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்" என்றதனுலும் அவரது சிவவேடப் பொலிவழகு குறித்தும், "அஞ்செழுத்தே யொன்ருகி அப்பரெனத்தோன்றி" என்றது. "உனக்கே வருஞ் சைவநலங் கூர்ந்து மிளிர்தரு நாவரசே" என்றது நால்வர் நான் மணிமாலை. சரணம் - திருவடி. தீது - தீமை: அதாவது, திருந்தா அமணர்தம் தீநெறிப்பட்டுக் கிடந்தமை. (7)

—வஞ்சியர்பால்
**தூதரனைத் தான்விடுத்த சுந்தரனைக் காணமற்**
**பேதமறத் தன்வயிறு பீறுங்கை—**

(கு - ரை.) வஞ்சியர் - திருவாரூர்ப் பரவைநாச்சியார். பால் - ஏழனுருபு. பரவையின் ஊடல்தீர்க்கத் திருவாரூர்ச் சிவபிரானை இரவில் இருமுறை சுந்தரமூர்த்திகள் தூதுவிட்டமை பிரசித்தம். காணமல் - காண மனம் வராமல்; காணதபடி; சுந்தரனைக் காண மனம் வராமல் தம் வயிற்றைப் பீறினவர்-ஏயர்கோன்கலிக்காமர்; இவர் வேளாண் மரபினர். தமக்கேற்பட்ட சூலைநோய் தீர்ப்பான் வரும் சுந்தரர் வரவுகேட்டுத் "தூதனுய் எம்பிரானை ஏவினுன் சூலை தீர்க்கும், ஏதமிங்கெய்த எய்தில் யான்செய்வதென்னும்" என்றுகூறி, 'மற்று அவன் இங்கு வந்து தீர்ப்பதன்முன் நான் மாயப், பற்றிநின்றென்னை நீங்காப் பாதகச்சூலை தன்னை, உற்ற இவ்வயிற்றினேடுங் கிழிப்பன்' என்று உடைவாள் தன்னுல் தம் வயிற்றைக்கிழித்துக் கொண்டவர் இந்த ஏயர்கோனுகிய நாயனுர். பேதம் அற - [தாம் கொண்ட] மாறுபாடு ஒழிய. (8)

—பூதத்தின்
**மிக்க புலவனுக்கா வேசிமனை மட்டாகத்**
**தக்க சிவிகைகணை தாங்குங்கை—**

(கு - ரை.) பூதத்தின் - பூதகணங்களைக்கொண்டு; மிக்க புலவன் - சுந்தரமூர்த்தி சுவாமிகள்; முதலையுண்ட பாலனை யழைத்தவரன்ருே! வேசி - கணிகையர் குலத்தினளாய பரவை யார்; இச்சொல் சிறப்பின்று; 'ஏகி' என்றுபாடமிருக்க லாமோ எனத் தோற்றுகிறது. மனை - மனையளவுக்கு ஆகுபெயர். மட்டு ஆக - குறையும்படி: அதாவது, பரவையாரது மனையளவு மட்டுமின்றித் திருவாரூர் முழுதும் நிறையும்படி. நென்மலையைக் குண்டையூரிலிருந்து திருவாரூர்ப் பரவை மாளிகைக்குப் பூதகணங் கள் விடுத்தமை சுந்தரர்சரிதத்தில் பிரசித்தம். குண்டையூர்கிழார் தாம் நென்மலைபெற்ற திருவருட்செயலினைச் சுந்தரர்க்குத் தெரிவிக்கவேண்டி திருவாரூர்க்குப் புறப்பட, தேவர்தம்பெருமான் ஏவ நம்பியாரூரரும் குண்டையூரைநோக்கிவர, இடையே சுந்தர மூர்த்திநாயனுரைக் கண்டு குண்டையூர்கிழார் எதிர்கொண்டு அவரது பாதந்தன்னில் தொழுது வீழ்ந்தெழுந்துநின்று தாமும் அவருடன் கூடிச்சென்று குண்டையூரினையடைந்தார் என்ற விடத்து ஒருகால் அச்சுந்தரர் ஏறிவந்த சிவிகையின்கணையினைக் குண்டையூர்கிழாராகிய வேளாளர் தாங்கியிருப்பரெனக்கொண்டு 'சிவிகைகணை தாங்குங்கை' என்பதற்கு விளக்கம்கொள்க. இனி, எதிர்கொண்டழைத்தமையையே இலக்கணையாக இங்ஙன் கூறிய தாக்கொள்ளலுமாம். சிவிகை - பல்லக்கு. கணை - சிவிகையின் வளைகொம்பு (Curved pole of a palanquin); 'சிவிகைதனைத் தாங்கும்' என்றும் பாடம். 'பூதலத்தின்' என்ற பாடம் சிறப்பின்று.

மூன்ருங்கண்ணிமுதல் இது வரையில், வேளாண்மரபினராய சைவநாயன்மார்களின் கைவழக்கம் கூறப்பட்டது. இனி, பொது வாகக் கூறப்படும். (9)

—மைக்கடுவாய்
மூக்கிற் புகைபுரிந்த மூதரவின் வாயிடத்து
நீக்கியகை நாக்கதனி னீட்டுங்கை—

(கு - ரை.) கடு - விஷம். மூக்கிற்புகைபுரிதல் - சினந்து சீறுதலின் குறி. மூதரவு = மாணிக்கப்பாம்பு. கிழப்பாம்பின் தலையில் மாணிக்கமுண்டாம் என்பர். வாயிடத்து நாக்கதனில் நீட்டுங்கை என இயையும். நீக்கிய கை - நீக்கவேண்டிய கையை என்றபடி. இங்கு அறியவேண்டிய வரலாறு:—சடையப்ப முதலியாரிடத்து அழுக்காற்றினால் பகைமைபாராட்டிய சோழராசன் புலவர் கூட்டத்தை இரவில் விருந்தினராக அவரில்லிற்கு ஏவ, அவர்கள் வந்தமைகண்டு அமுதூட்ட வீட்டில் ஒன்றுமிராமையால் முதலியார் தமது மனைவியின் மாங்கலியத்தைவிற்றுப் பண்டங்கள் கொணர்ந்து சமைத்து அரிய விருந்திட்டு உபசரித்தனர்; பின்பு பரிசுகொடுக்கப் பொருளில்லாமை கண்டு, இல்லையென்பதைக்காட்டிலும் உயிரைவிடுதல் நலம் எனத் துணிந்து தம் வீட்டிற்கருகிலுள்ள பாம்புப்புற்றில் கையிட்டார்: சீறிவந்த நாகம் 'இஃது கொடையிற் சிறந்த கைத்தலமன்றோ, இன்று நம் மனைபுகுந்து கையேந்துவது' என்று கொண்டு, அக் கரத்தில் தனது மாணிக்கத்தை யுமிழ்ந்துகொடுக்க, பிரபு எடுத்துப் பார்த்து மகிழ்ந்து அவ்விலையுயர்ந்த மாணிக்கத்தை அப்புலவர்களுக்குச் சன்மானங் கொடுத்தனுப்பினார் என்பது. இனி, புலவர்க்கு நாகரத்தினம் அளித்தது நின்றையூர் காளத்திப்பிள்ளை என்றுங் கூறுப. "பைந்நாக மணிகொடுத்தான் ஒருவேளாளன்" என்றதோர் தனிப்பாடல்; "கதிர்தரும் பணி மாமணி பாவலர் கையின்மீது கருத்துடனீந்து" என்றது தண்டநாயகன் பள்ளு (செ. 36.) "அங்கையாடரவின் வாயிலிட்டவ னெனல்குலாடரவு தீண்டிலான்" என்று இவ்வரலாற்றினையுட்கொண்டு கூறினது ஆறைக்கலம்பகம். (10)

—ஆக்கமுடன்
ஏதமற்ற கீர்த்தியைக்கொண் டேட்டகத்தி லேயடிமைச்
சாதனமிட் டேகொடுத்த தங்கக்கை—

(கு - ரை.) ஏதம் - குற்றம். ஏதமற்ற கீர்த்தியாவது-'மேழித் தேவர் பெருமைக்கு வேறேதேவர் கூறேனே' என்றும், "தாயனைய காராளர் கோதில் குலந்தனக்குநிக ருண்டாகிற் கூறீரே" என்றும் பேசும்படி நின்ற புகழ். அத்தகைய புகழைக் கொண்டிருந்தே, ஏட்டகத்தில் - வேதம் முதலிய நூல்களில், அடிமைச் சாதனம் இட்டே கொடுத்த - நாங்கள் தொண்டாய்ப்பணி செய்வோம் என்று உரிமைச்சாசனம் இட்டுக் கொடுத்த, தங்கக்கை - மேன்மையையுடைய கை என்றபடி. இஃது வேளாண்வாகை குறிப்பது. "மேன்மூவரு மனம் புகல, வாய்மையான் வழியொழுகின்று"; "மூவரு நெஞ்சமர முற்றி யவரவர், ஏவலெதிர்கொண்டு மீண்டுரையான்—ஏவல், வழுவான் வழிநின்று வண்டார்வயலுள், உழுவா னுலகுக் குயிர்" என்றது புறப்பொருள் வெண்பாமாலை.

மேல் "இடுக்கணினுல்,மாமறையோர் மன்னர் வணிகர் முதலாகத், தாமலையாமற் கொடுத்துத் தாங்குங்கை" என்றதும் இக்கருத்துப் பற்றியே. ஏடு - நூல்: சுருதிஸ்மிருதிகள். சாதனம் - சாசனம்; அதிகாரச் சின்னம். பொன் [நெல்] விளைத்தலின் 'தங்கக்கை' என்ருர். (11)

—மேதினியில்

**சூலி முதுகிற் சுடச்சுடவப் போதுசமை**
**பாலடிசி றன்னைப் படைக்குங்கை—**

(கு - ரை.) மேதினி - பூமி: மது கைடபர்களின் மேதஸினுல் [உடற் கொழுப்பினுல்] நனைக்கப்பட்டமைபற்றிப் பூமிக்கு 'மேதினி' என்ற இப்பெயர் வந்தது. தன்னிடத்து வந்த ஓர்புலவன் நிறைசூல்மடவார்முதுகினிற் சோறிடின் உண்பேன் என்ன, ஒருவேளாளன் சூலுற்றிருந்த தன்மனைவியைக் குப்புறக்கிடத்தி அவள்முதுகில் மகிழ்வோடு அன்னமிட்டு, அப்புலவனை யுவப்பித் தனன் என்ற கதை ஈண்டு கருதத்தக்கது. சூலி - கர்ப்பிணி. அடிசில்-சோறு. தண்டநாயகன்பள்ளு என்ற நூலில் இவ்வரலாறு "துங்க முலாவிய தமிழ்தெரியுஞ் சங்கமேய புலவர் மகிழச், சூலிமுதுகினிற் சுடுசோறளித்திடு துரங்கதாரி" (செ-9) என்றும், "துங்கமேவிய பாவலர் தங்கட்குச் சூலி வெந்நிற் சுடுமன்ன மிட்டு" (செ: 35) என்றும் குறிப்பிடப்படுகின்றது. "அன்று சூலிமுது கன்னமிட்டவன் என்னன்னை கூன்முதுகழிக்கிலான்" என்று இவ்வரலாற்றினையுட்கொண்டு கூறினது ஆறைக்கலம் பகம். "ஓர் புலவனுக்காத், தன்கண்மைசூலி முதுகினிற் சோறிட்ட தன்மையினுல், வன்கண்மை செய்யவும் வல்லதன்ருே தொண்டை மண்டலமே" என்றது தொண்டைமண்டலசதகம். இங்ஙன், வேளாளரின் குடிப்பிறப்பிற்குரியவண்மை, இயல்வது கரவாமை முதலியன பெறவைக்கப்பட்டன. (12)

—சாலவே

**நாணந் தராம னடுங்காமற் கூசாமற்**
**பாணன் பிணத்தைப் பரிக்குங்கை—**

(கு - ரை) நாணம்-வெட்கம், கூசுதல்-அருவறுத்தல். இதிற் குறித்த செய்தி வருமாறு:—யாழில் வல்ல பாணனெருவன் அநாதரவாய் வந்திறந்தமையை வேளாண்மகனெருவன் கண்டு, "இறந்தார்க்கும் இல்வாழ்வானென்பான் துணை" என்பதற்கேற்பவும், இறந்தவன் கற்றுவல்ல பாணனுதலின் இழிஞர்கைக் கொடுத்தல் தகாதென்றுங்கருதித் தானே அவனுடலைத் தனது தோள்களிற்சுமந்து இடுகாட்டிலிட்டுத் தகனகிரியைகளைச் செய்துமுடித்தான் என்பது. இதனை "வரைத்திண்புயத்தே, பேருனபாணன் பிணஞ்சுமந்தேவரும் பெற்றிகொண்டே, மாருத கீர்த்திபடைத்ததன்ருே தொண்டைமண்டலமே" என்றுபாராட்டியது அம்மண்டல சதகம். பாணன்பிணத்தைப்பரித்தவன் மறவைப்பதியைச்சேர்ந்த வேளாண்மகனுகிய அரங்கேசன் என்னும் பெயரினன் என்பதைப்பின்வரும் பாடலால் தெளியலாம்: "உற

வைப் பிரிந்துவந் தேயிறந்தா னங்கொரு புலவன், மறவைப்பதி நதிவம்சம் வந்தோனரங்கேச வள்ளல், அறவைப் பிணஞ்சுடத் தான்செய் எண்ணுன்கின் அறத்ததென்ரோ, பிறர்கைக் கொடாம லெடுத்தானப் பாணன் பிணத்தினையே". 'பாணன் வெம்பிண மெடுத்தவன் கொடியபாணன் வெம்பிணமெடுக்கிலான்' என்று இவ்வரலாற்றினையுட்கொண்டு கூறினது ஆறைக்கலம்பகம். (13)

—காணவே

**தண்டமிழோன் றன்மனத்திற் சந்தேகந் தீரக்கூழ்**
**உண்டவயிற் றைப்பீறி யூற்றுங்கை—**

(கு - ரை.) இதனிற் குறித்த விவரம்:—பேறையூரான் என்னும் ஒரு வேளாளன் தன்வீட்டில்வந்த புலவனுக்கு விருந்திட்டுப் பின் தான் உப்பில்லாத கூழையுண்டு வெளிப்போந்தபோது, அப் புலவன் "நீர்மாத்திரம் நல்ல உணவையுண்டு வந்தீரோ?" என்று கேட்க, உடனே அவன் கூரியவாளால் தன் வயிற்றைக்கீறி யுள்ளேயிருந்த உப்பில்லாத சோளக்கூழை வெளிச்சொரிந்து மெய்ப்பித்தான். "செம்பியன்முன் வயிறிடந்தான் பேறையூரான்" என்ற தனிப்பாடலால், 'தண்டமிழோன்' பெயர் 'செம்பியன்' என இருக்கலாம் எனத் தோற்றுகிறது. இவ்வரலாற்றினை, 'நறுங்கூழெனையன்றி யுண்டனையோவென நாணிவயி, றுறுங்கூர் நுதிவடிவாளாற் பிளந்திட்டிருங்கரினை, யுறுங்கூழ் புறத்திலிருந் தானுக்குத்துப்பிலாத புற்கை, வறுங்கூழ் சொரிந்திட்ட முற்ற வுண்டான் றெண்டைமண்டலமே" என்றது தொண்டை மண்டலசதகம். இனி, தன் வயிற்றிலிருந்த உணவைத் தன்னுயிர் போமென்பதுணர்ந்தும் அவ்வயிற்றைப் பீறியுங் கொடுத்தான் ஒரு வேளாளன் என்ற வரலாறும் நினைக்கத்தக்கது. (14)

—கண்டளவில்

**நீலிதனக் கஞ்சி நின்றவணி கேசனுக்காக்**
**கோலி யபயங் கொடுக்குங்கை—**

(கு - ரை.) இதிற் குறித்தகதை விவரம்:—பிறமகளிரைக் காமுற்றுத் திரிந்த ஒரு வணிகன் 'அவ்வொழுக்கந்தகாது' என மறுத்த தனது மனைவியான நீலி யென்பவளைக் கொன்றுவிட, அவள் தனக்குநேர்ந்த அகாலமரணத்தினுற் பேயாகிப் பழிக்குப் பழிவாங்க நினைத்துத் திருவாலங்காட்டைச் சேர்ந்ததொரு காட்டில் திரிந்துகொண்டிருக்கையில், அவளது கணவனுன வணிகன் வியாபாரத்தின்பொருட்டுப் பழையனூர்க்குச் செல்லும்வழியில் அப்பேய் தனது முன்னையவடிவங்கொண்டு ஒரு கள்ளிக்கட்டையைப் பிள்ளையாக்கித் தன் இடுப்பிலெடுத்துக்கொண்டு அவனைத் தொடர, அவன் அவ்வடிவத்தைப் பேயென்று அறுதியிட்டு அப்பேயினது வஞ்சமொழிகளுக்கு இணங்காது போய்க்கொண்டிருக்க, பேயும் 'எனது பிராணநாயகரே! இது முறையோ! என்னைத் தனியே காட்டில் விட்டு அகலக் கருதினீரே!' என்று தொடர்ந்து

போய்ப் பழையனூரையடைந்து அங்கு அம்பலத்திற் கூடியிருந்த வேளாளரைச் சார்ந்து தனது வழக்கைக்கூறித் தனது குழந்தையை அவ்வணிகனிடஞ்செலுத்தி அவனைத் தன் கணவனென்று மெய்ப்பிக்க, அவ்வணிகன் 'இது பேய்க்கூத்து' என்ன, இருவர் வழக்கையுங்கேட்ட அவ்வேளாளர்கள் எழுபதின்மரும் 'நீ உயிரை யிழப்பின் நாங்கள் எழுபதின்மரும் எமது உயிரைத் தருவோம்; நீ இவளுடன் இணங்கியிருப்பாயாக' என அபயங் கொடுத்து அன்றிரவு தங்கும்படி அம்மையப்பர் சந்நிதியில் ஓர் அறையில் விடுத்தனர் என்பது. கோலுதல் - ஆலோசித்தல். அபயம் - 'பயப்படாதே' என அடைந்தோர்க்கு ஆதரவளித்தல். (15

—ஆலமெனும்

**வன்னி யிடைமூழ்கி வானோர் பழிகழுவிக்**
**கன்னிதனை யேமணந்த காட்சிக்கை—**

(கு - ரை.) ஆலம் எனும் - ஆலகாலமென்னும்படி கொடிதான, வன்னியிடை - நெருப்பிலே, மூழ்கி - குளித்து, வான் ஓர் பழி கழுவி- [தமக்கு ஏற்படவிருந்த சொல்திறம்பியமை என்ற] மிக்கபெரும் பழியைத்துடைத்து, (அச் செயலின்மூலம்), கன்னி தனையே - கீர்த்தி மங்கையையே, மணந்த - கூடிய, காட்சிக்கை - அழகியகை என்றவாறு.

நீலிக்கஞ்சிய வணிகனுக்கு அபயங்கொடுத்து அன்றிரவு ஓரறையில் தங்கும்படி வேளாளர்கள் எழுபதின்மரும் சொல்ல, அவ்வணிகனும் அம்பலத்தாரது சொல்லை மறுக்கமுடியாமல் அவளுடன் இணங்கியிருக்க, உடனே அப்பேய் அவனுயிரை மாய்த்து மறைந்துவிட, அதனையுணர்ந்த அம்பலத்தார் எழுபதின்மரும் தாம் அளித்த வாக்குறுதிப்படியே தீக்குழியிற் பாய்ந்து தமது உயிரை விடுத்தார்களென்பது அறியவேண்டிய விவரம். இதனை, "மாறுகொடு பழையனூர் நீலி செய்த வஞ்சனையால் வணிகனுயிரிழப்பத் தாங்கள், கூறியசொற் பிழையாது துணிந்து செந்தீக் குழியிலெழுபதுபேரு முழுகிக்கங்கை, யாறணிசெஞ்சடைத் திருவாலங்காட்டப்ப னண்டமுற நிமிர்ந்தாடு மடியின்கீழ் மெய்ப், பேறுபெறும் வேளாளர்பெருமை யெம்மாற் பிரித்தளவிட் டிவளவெனப் பேசலாமோ" என்ற சேக்கிழார் புராணத்தாலும், "இன்னும் புகழ் நிற்க வோர்பழிக்கா மற்றெழுபதின்மர், துன்னுந் தழல்புக் கொளித்ததெல்லாஞ் சுருதிப்பொருளா,யுன்னும் புரிசைத் திருவாலங் காட்டி னிறைபதிக, மன்னுந் தமிழில் வகுத்ததன்றோ தொண்டைமண்டலமே" என்ற தொண்டைமண்டல சதகத்தாலும் அறிக. கன்னி - புகழ்க்கன்னியாதலை "இன்னும் புகழ் நிற்க" என்று மேற்குறித்த சதகத்தொடராலும் அறிக. 'பெருங்கீர்த்திமங்கை பிரியாமல் வாழுங்கை' என்றார் தொடக்கத்தும். 'ஆலம்' என்ற சொல் விஷத்தையேயன்றி, ஆலங்காட்டையும் சூசிப்பிக்கும். வான் ஓர்- ஒருபொருட்பன்மொழியாகவுமாம். காட்சி

- அழகு: 'அணங்கு மெய்ந்நின்ற வமைவரு காட்சி' என்றது பொருநராற்றுப்படை (வரி, 20). (16)

—துன்னுமொரு
பேருலகை யெல்லாம் பிழைப்பிக்கு மோர்கொழுவின்
கூரிலொரு வன்கழுத்தைக் குத்துங்கை—

(கு - ரை.) மேற்குறித்த திருவாலங்காட்டு நீலிகதையி லோர் பகுதி ஈண்டு அறியவேண்டுவது:—வணிகனுயிரிழப்பின் நாங்கள் எழுபதுபேரும் உயிரிழப்போம் என்று உறுதிசொல்லிய எழுபது வேளாளர்களில் அறுபத்தொன்பதின்மர் தீயில் வீழ்ந்திறக்க, ஒருவன் அப்போதங்கில்லாமல் வயலில் உழுதுகொண்டிருக்க, அவ்வயலில் நீலிப்பேய் அவனது மனைவியுருவங்கொண்டு சென்று, "அறுபத்தொன்பதின்மரும் தீயில் வீழ்ந்திறக்க, நீ மட்டும் உயிர் வாழ விரும்புகின்றாயா; * முன்கையுடையவற்குக் கொழுவே படைக்கலம்" என்று சொல்ல, அதுகேட்ட எழுபதாமவன் தன் கையிலிருந்த கூரிய கொழுவினால் தன் கழுத்தைக் குத்திக்கொண்டு உயிர்கொடுத்துச் சொல்லையும் புகழையும் நிலைநிறுத்தினான் என்பது. இதனை "விழுவேமெனச் சென்று வீழ்ந்தாரிலோர் மைந்தன் வேறுபட, வுழுவேலியிற் சென்றொருநீலி முன்கை யுடையவற்குக், கொழுவே படைக்கலமென்று சொலாமுனங் கூறியசொல், வழுவேயெனப் பொன்று வல்லாளனுந் தொண்டை மண்டலமே" என்று பாராட்டியது தொண்டைமண்டலசதகம். கோதைவேல் மன்னவர்தங் குடைவளமுங் கொழுவளமே யாதலாலும், ஏர்ப்பின்னதுலகமாதலாலும், 'பேருலகையெல்லாம் பிழைப்பிக்கும் ஓர் கொழு' என்று சிறப்பித்தது. கொழு-கலப்பையின் காறு. ஒருவன் - எழுபதாமவனாகிய வேளாண்மகன். (17)

—பாரறிய
வீறு பெறும்பறையன் வீயாம லோர்கலத்திற்
சோறுபிசைந் துண்ட சுடர்மணிக்கை—

(கு - ரை.) வீறு - சிறப்பு. பறையன் - நந்தன்சாம்பான் என்பவன். வீயாமல் - பசியாலிறவாதபடி. ஓர்கலத்தில் - ஒரே பரிகலத்தில். பரிகலம் - சோறுண்ணும் பாத்திரம் [Plate]. விவரம் பின் வருமாறு:—அரசனது பரிவாரத்தாரால் துரத்தப்பட்ட நந்தன்சாம்பான் என்னும் பறையன் பேராவூர் வேளாளப்பிரபு சாப்பிடுஞ்சமயத்தில் அவரது வீட்டுவாயிலிலோடி முறையோ வென்று கூவ, அப்பிரபு அவனைத் தடையின்றி விரைவிலே உள்ளே வரவழைத்துத் தன்னுடனிருக்கச்செய்து தன் பரிகலத்திலேயே உடனுண்ணச்செய்து அபயங்கொடுத்தார்: இதனைக் கண்ட அரசனது பரிவாரத்தார் அஞ்சிச்சென்றனர் என்பது.

---

* முன்கையுடையவர்-இரப்போர்க்குக்கேட்டதைக்கொடுக்க எப்போதும் முன்னே கைந்நீட்டிக் கொண்டிருக்கும் வேளாளர்.

இச்செயலைப்பாராட்டி "நந்தனுட னமுதுண்டான் பேராவூரான்" என்றது தனிப்பாடல். தொண்டைமண்டலசதகமும் "தரையார் மழையுந் தபனனும்போலத் தடையொன்றின்றி, யுரையாது நீசென்று டுண்டமையாலுமோ ரூனமின்றித், திரையார்புவியிற் புகழேபடைத்துத் தினந்தினமும், வரையாது வள்ளன்மைகாட்டு வதாற் றொண்டைமண்டலமே" என்று சிறப்பித்தது. [ஈண்டு, சோணாட்டுத் திரிபுவனம் என்ற புவனையில் பெருஞ்செல்வனும் வள்ளலுமாகத் திகழ்ந்த சோமன் என்பவனைப்பற்றி "பறையனோடொக்க வுண்டான் அன்னைசோமன்" என்று கூறும் தனிப்பாடல்ஒருசார் ஒப்பு நோக்கத்தக்கது.] (18)

—ஆருத்

தொடையி லெழுசிலந்தி தோற்றுவிக்கப் பட்டின்
புடைவை கிழித்த பெருங்கை:—

(கு - ரை.) இந்தக் கதை வருமாறு:—புதிதாகப்பட்டம் பெற்ற சோழராசனொருவன் வெண்ணெய்நல்லூர் சடையப்ப முதலியார் தன்னைவந்து காணாமையால், அவர் வறுமையுறும்படி செல்வமனைத்தையும் கவர்ந்தபின்னும் அவர் அரசனைப்போய்க் காணாமலிருந்தார்; அக்காலத்தில் சினவர்த்தகனொருவன் இழை யாயிரம் பொன்பெற்ற பட்டொன்றுகொண்டுவந்து அரசனுக்குக் காட்ட, அவன் அதன் விலைக்கான பொருள் தன் கருவூலத்தில்லா மையால் வாங்காது விடுக்க, அவ்வர்த்தகன் அதனைச் சடையப்ப முதலியாரிடத்திற் கொண்டுபோக, அவர் அப்பட்டினை வாங்கித் தரித்துக்கொண்டார். இதனை அரசன் கேள்வியுற்று அவமானத் தால் மனம்புழுங்கி முதலியாரை வலுக்கட்டாயப்படுத்தித் தன் சமூகத்தில் வரவழைத்து "நான் அழைத்ததற்கு நீர் ஏன் வராமல் மறுத்தீர்" என்று வினவ, அப்பிரபு 'எனது துடையிற் சிலந்தி' என்ன, அரசன் நம்பாமையால், அவ்விலையுயர்ந்த பட்டைக் கிழித்துத் துடைபுண்ணைக் காட்டினார். அரசன் தன்செல்வத்தை விட விலையுயர்ந்த பட்டை இவர் வறுமையுற்ற காலத்தில் வாங்கி யதைக் காட்டிலும், அதனை மிக அலக்ஷியப்பொருளாக மதித்துக் கிழித்தது பேராச்சரியம் என்று அதிசயித்துப் பிரமித்து இவரைக் கொண்டாடி இப்பிரபுவை அரசர்தாமே சென்று காண்பது வழக்கம் என்பதையும் தெரிந்துகொண்டு களித்திருந்தனன் என்பது. இதனை "தெள்ளத்தெளிந்தவர் செய்தக்கதோர்முறை செய்யிலையா,எள்ளத்தனை மலையத்தனையாமென்பதின் றறிந்தோம், உள்ளற்கரிய தொடையாடைகீறிய தொன்றுமொரு, வள்ளற் றகைமையொடொத்துளதாற் றொண்டைமண்டலமே" என்று பாராட்டியது சதகம். "வென்றிமேவு துடையாடை கீறினவன் வேலையாடையது கீறிலான்" என்று இவ்வரலாற்றினை யுட் கொண்டு கூறியது ஆறைக்கலம்பகம். "பொதிதருங்கலை கீறிக் காலினிற் பொருந்து புண்ணினை வேந்தர்முன் காட்டி" (செ: 36) என்றது தண்டநாயகன்பள்ளு. ஆருச்சிலந்தி என இயைக்க. சிலந்தி-விஷக்கட்டி (ulcer). தோற்றுவிக்க-(அரசனுக்குக்) காட்ட.

புடைவை - ஆடை என்றபடி. பெருங்கை - பெருமைபொருந்திய கை. மோனைக்காக "பொருங்கை" என்ற பாடமும் உண்டு; அதற்கு அரசனோடு மாறுபட்ட கை என்னவேண்டும். (19)

—கடல்சூழ்ந்த

**பார்பூட்டு மன்னர் பரிகரிபூட் டக்கதிரோன்**
**றேர்பூட்ட வேர்பூட்டுஞ் செம்பொற்கை—**

(கு - ரை.) கதிரோன் தேர்பூட்ட அதனாலாகும் விடியற் காலையில் வேளாளர் ஏர்பூட்டுதலால் மன்னர் பரிகரிபூட்டல் நிகழ்கின்றது என்றபடி. 'பரிகரிபூட்ட' என்றது, தத்தம் தொழில் களில் முனைய என்ற கருத்தது. பரிகரி - உம்மைத்தொகை. பரி - குதிரை; கரி - யானை. இவை மன்னர்க்கு வாகனங்களாகும். பார் பூட்டல் - உலகையாளுதல். (20)

—வீரமதன்

**ஐங்கோ லெடுக்க வணைகோ லெடுக்கவுழும்**
**பைங்கோல் பிடிக்கும் பதுமக்கை—**

(கு - ரை.) வேளாளர் உழுங்கோலைக்கையிற் பிடித்தலால், மன்மதன் தன் வில்லெடுக்கவும் பஞ்சபாணங்களைத் தொடுக்கவும் ஆகின்றது என்றது கருத்து. மதன் - மன்மதன். ஆடவர் பெண் டிர்க்குக் காமத்தை விளைக்குங்கடவுள்: இவனை முற்றத்துறந் தார்க்கும் வெலல் அரிதாகலின், 'வீரமதன்' என்றார். ஐங்கோல் - பஞ்சபாணம்: கோல் - அம்பு: மன்மதனுக்கு மலரம்புகள் ஐந்து: அவை தாமரை, மாம்பூ, அசோகு, முல்லை, நீலோற்பலம் என்பன. அணை - (தான்) பிடித்த. கோல்-வில்: இலக்கணை. மன்மதனுக்குக் கரும்பு வில். 'உழும் பைங்கோல்' என்றவிடத்துக் கோல் - தாற்றுக்கோல்; ஏரடிக்குஞ்சிறுகோல். ஈற்றுக்கோலுக்குப் பசுமை அடைகொடுத்தது, என்றும் தளராமைபற்றி. இதனால் காமமாகிய புருஷார்த்தம் மன்பதைக்கு வேளாளரால் சித்திப்பது கூறப்பட்டது: அச்சிறப்பு நோக்கிப் பதுமக்கையாயிற்று. பதுமம்- தாமரை. (21)

—இங்கிதமாஞ்

**சீர்படைத்த பூபாலர் செங்கோல் பிடிப்பதற்குப்**
**பேர்படைத்த மேழி பிடிக்குங்கை—**

(கு - ரை) இங்கிதமாஞ்செங்கோல் என இயைக்க. இங்கிதம் -இனிமை. மேழி-கலப்பை. "ஆழியால் உலகளிக்கும் அடல் வேந்தர் பெருந்திருவும்'****மேழியால் விளைவதல்லால் வேறொன் றால் விளையாவே" என்ற ஏரெழுபது ஒருசார் ஒப்பு நோக்கத் தக்கது. பூபாலர்-பூமியைக் காக்கும் அரசர். (22)

—கார்படைத்த

**மிஞ்சுமதி கீர்த்தியைப்போன் மேதினியெல் லாந்தழைக்கச்**
**செஞ்சாலி நாற்றைத் தெளிக்குங்கை—**

(கு - ரை) மேதினியெல்லாந்தழைக்கச் செந்நெற்பயிர் நாற்றை விடுபவர்கை வேளாளர் கை என்றபடி. செஞ்சாலி-செந்நெல். தெளித்தல்-(நாற்றுவிடுதற்காக) விதை தூவுதல்: இது நாறு வார்த்தல் எனப்படும். விதைநெல்லை நீரில்ஊறவைத்துச் சிறிது முளைதோன்றியபின் அவ்விதையைத் தூவுதலும் வழக்கம். கார்-மேகம். படைத்த மிஞ்சு மதி-சிருட்டிக்கப்பட்ட பூர்ணசந்திரன். கீர்த்தி-புகழ். மேகம், பூர்ணசந்திரனின் நிலவொளி, புகழ் இவை மேதினியெல்லாம் தழைக்கச்செய்து பரவியிருத்தல் கண்கூடு. "தண்மதியத்துதயத் தெழுந்த நிலாக்கற்றை,விண்ணும் மண்ணுந் திசையனைத்தும் விழுங்கிக் கொண்ட விரிநன்னீர்ப், பண்ணை வெண்ணெய்ச் சடையன்றன் புகழ்போ லெங்கும் பரந்துளதால்" என்றதும் ஒருபுடை நினைக. கார் மதிகீர்த்தி - உம்மைத்தொகை. மிஞ்சுதல்-மிகுதல்: வளர்தல்: "பகல்கண்மிஞ்சி" என்று சீவக சிந்தாமணி (செ:255). எனவே, மிஞ்சுமதி-வளர்மதி. கீர்த்தி-புகழ். கீர்த்தியை வெண்ணிறமுடையதாக வருணித்தல் கவிசமயம்என்ப பதும் நினைக்கத்தக்கது. (23)

—எஞ்சாமல்

**வெள்ளைக் களைகளைந்து வீறும் பயிர்தழைக்கக்**
**கள்ளக் களைகளைந்த கற்பகக்கை—**

(கு - ரை.) எஞ்சாமல்-குறைபடாமல். உழுது எருப்பெய்த பின் பயிர் தழைக்கக் களைகட்டல் இன்றியமையாதாகலின், 'களை களைந்து' என்றது. வெள்ளைக்களை-அசாரமான அற்பப் புல் பூண்டு முதலியன. வெள்ளை-அசாரம்; அற்பம். கள்ளக்களை-வஞ்சனை முதலிய குற்றம்: இருபெயரொட்டுப்பண்புத்தொகை. வேளாளர் கள்ளமின்றி இருந்தமையை, தொண்டைமான் சக்கரவர்த்தியாலாளப்பட்ட காஞ்சீபுரத்தில் காக்கை கரியதன்றி, அந்நாட்டு வேளாளர்மனம் அறியாமை வஞ்சனை முதலிய கருங்குணமுடையதல்ல என்னும் பொருள்படும்படி—"வஞ்சிவெளிய குருகெல்லாம் பஞ்சவன்றன், நான்மாடக்கூடலில் கல்வலிது, சோழனுறந்தைக் கரும்பினிது தொண்டைமான், கச்சியிற்காக்கைகரிது" என்ற ஔவைபாடலால் தெளியலாம். இரவா ரிரப்பார்க்கொன்றீவர் கரவாதாதலின், 'கற்பகக்கை' என்றது. கற்பகம் - தேவதரு: தன்னையண்டிவேண்டியவர்க்கு அவர் விரும்பியதைக் கொடுக்குந் தெய்வத்தன்மையது. (24)

—வள்ளுறையும்

**விற்போர் மதகரிப்போர் வெம்பரிப்போர் வெற்றிப்போர்**
**நெற்போர் மூதற்போர் நெரித்திடுங்கை—**

(கு - ரை) வள் உறையும் வில்-வலிமை தங்கிய வில். வள்-வலிமை: 'வள்வார் முரசு' (புற. வெ.மாலை: 3,2,கொளு) விற்போரும் யானைப்போரும் குதிரைப்போரும் தம் மன்னர்க்கு வெற்றிப் போராகுமாறு தமது கையினுல் நெற்போர் முதலிய குவியலிலுள்ள தானியங்களைகிமிண்டுவர் வேளாளர் என்றபடி. இவர்கள் கையால் நெற்போர்மூதலாகிய போரை நெரிடுத்திடுதலால்

பகைப்புலத்துத் தம் மன்னரால் பகைவர் நெரிக்கப்படுவர் என்பது பாவம். 'பலகுடைநீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர், அலகுடை நீழலவர்" என்ற திருக்குறளையும், 'தம்மரசனுக்குக் கொற்றம் பெருக்கி மண்முழுதும் அவனதாகக் கண்டிருப்பர்' என்று பரிமேலழகர் கூறிய விசேடவுரையையும் காண்க. "புரப்போர் கொற்றமும், உழவிடைவிளைப்போர்" என்ற சிலப்பதிகாரமும், "பொருபடைதரூஉங் கொற்றமு முழுபடை, யூன்றுசான் மருங்கினீன்ற தன் பயனே" என்ற புறநானூறும் இங்குக் காணத்தக்கன. விற்போர், யானைப்போர், குதிரைப்போர் இவை செய்பவர் தம் நாட்டு வேந்தர்கள்: அவை வெற்றிப் போராகுமாறு செய்பவர் வேளாளர் என்றபடி. நெற்போர்-நெற்குவியல். போர்-கதிர் வைக்கோல் இவைகளின் படப்பு. முதல்-முதலாகிய, போர்-தானியக் குவியல்கள். நெரித்தல்-நிமிண்டுதல் (To rub or crush with the hand, as ears of grain). (25)

—கற்பகம்போல்

**மேழிக் கொடிசிங்க வெற்றிக் கொடிகுயிலின்**
**வாழிக் கொடியே மருவுங்கை—**

(கு - ரை.) வேளாளர்க்குரிய கொடிகளில் மேழி, சிங்கம், குயில் ஆகிய மூன்றும் கூறப்பட்டன. இங்கு, வேளாளர்க்கு இவை உரியன என்பதைப் புராணசாரத்திரட்டு கூறும் தசாங்கத்தில் "தாவறக் காட்டுந் தனிக்குறிக் கொடியாஞ் சிங்கங் குயிலொடு திகழ்தரு மேழியும்" என்ற வரிகளாலறியலாம். ஆதிகாவியம் என்னும் கிரந்தம் வேளாளர்க்கு இந்தக் கொடிகள் தேவர்களால் கொடுக்கப்பட்டது என்று கூறும்: "மயில்குயில் மீனஞ்சிங்க முன்னியதுவசமாக, இயலுறு தேவரெல்லா மின்பமோடளித்துப் பின்னர்" என வந்துள்ளது. வாழி - அசை. (26)

—நீளுலகில்

**ஆதுலர்க்குச் செம்பொ னளிக்குங்கை யாகமங்கள்**
**வேத புராணங்கள் விரிக்குங்கை—**

(கு. - ரை.) ஆதுலர் - வறியவர், தரித்திரர். ஆதுலர்க்குச் செம்பொன் அளிக்குங்கை என்பதற்குத் திருநின்றையூர்க் காளத்திவாணமுதலியாராகிய வேளாளப்பிரபுவை எடுத்துக்காட்டலாம். அவரிடத்துச் சென்ற புலவரொருவர்பாடிய "நீளத் திரிந்துழன்றாய் நீங்கா நிழற்போல, நாளைக் கிருப்பாயோ நல்குரவே - காளத்தி, நின்றைக்கே சென்றக்கா னீயெங்கே நானெங்கே, இன்றைக்கே சற்றே யிரு" என்ற பாடல் அவர் வண்மைக்குச் சான்றாகும். இனி, ஆகமங்கள் வேத புராணங்கள் விரிக்கும்கை என்பதற்கு - வேளாளர் ஆகமம் வாசிப்பதுபோலவே வேதமும் வாசிக்கலாமென்பதற்குச் சிவஞானபோதஞ் செய்தருளிய மெய்கண்டதேவராகிய வேளாளர் தமது நூலில் "அக்கரங்களின்றாம் அகரவுயிரின்றேல், இக்கரமத்தென்னு மிருக்கு" என்று பிரமாணித்தவிடத்து, அவர் வேதமுணர்ந்தவரென்றே தெள்ளிதிற்

றுணியப்படுதலாலும், இன்னுஞ் சுத்தசைவ வேளாளர்கள் வேத மாதாவாகிய பிரமகாயத்திரி, சிவகாயத்திரி இவைகளை ஜெபித்து வருகின்றார்களாதலாலும், சிலர் வேதத்தைப் பாஷியத்தோடும் ஆராய்ந்தறிந்து வருகின்றார்களாதலாலும் இங்ஙனம் வேளாளரைப்பற்றிக் கூறியது ஒக்கும் என அறிக. ஆகமங்கள்-காமிகம் முதல் வாதுளம் இறுதியாகக் கூறப்படும் இருபத்தெட்டாகும். இவைகளை வேளாளர் கற்றொழுகுவரென்பதை “காவியமாகிய காமிகங் கண்டுகங்காகுலத்தோர், ஓவியபாத்திரராக.........” என வரும் தொண்டைமண்டலசதக வடியாலும் உணரலாம். வேதம்-ருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்கு. புராணங்கள் பதினெட்டு. அவற்றுள் சிவபுராணமாவன பத்தும் ஈண்டுக் குறிக்கப் பட்டன எனலாம். [சிவபுராணமாவன-சைவம், காந்தம், இலிங்கம், கூர்மம், வாமநம், வராகம், பௌஷியம், மச்சியம், மார்க்கண்டேயம், பிரம்மாண்டம் என்பன] (27)

—நீதிநெறி
**மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை**
**தானந் தருமந் தழைக்குங்கை—**

(கு - ரை.) பொருள் வெளிப்படை. மானமாவது-எஞ்ஞான்றும் தம்நிலையின் தாழாமையும், தெய்வத்தான் தாழ்வு வந்துழி உயிர்வாழாமையுமாம். குலம் - குடிமரபு. வண்மை-இன்னார் இனையரென வரையாது கொடுப்பது. தானம்-சத்பாத்திரத்திலிடுவது. தருமம்-நற்செயல். (28)

—ஆனதமிழ்
**கல்லார்க ளென்னுமற் கற்றோர்க ளென்னுமல்**
**எல்லாரை யுங்காத்தீ டேற்றுங்கை—**

(கு - ரை.) இக்கண்ணியால், அடுத்தோர் யாவராயினும் அவரை ஆதரிப்போர் வேளாளர் என்பதாயிற்று; **உதாரணம்:—** பாண்டிமண்டலத்திலிருந்து கணவனோடு தலயாத்திரையாகக் காஞ்சிபுரத்திற்கு வந்த அழகிய பெண்ணொருத்தி திசைதப்பிக் குன்றவர்த்தனம் என்னும் ஊரில் ஒரு வேளாளன் வீட்டில் அடைக்கலம் புகுத, அவ்வேளாளன் அவளைத் தன் சகோதரியாகப் பாவித்து உபசாரத்தோடு ஆதரித்துவைத்திருந்து, அப்பெண்ணைத் தேடிவந்த கணவனையும் மைத்துனமுறைகொண்டு உபசரித்து, அவ்விருவருக்கும் ஆடையாபரணமுதலிய வரிசைகொடுத்து, அவர்களுடன் தானுஞ்சென்று அவர்களூரைச் சேர்வித்து விட்டுவந்தான் என்பது நோக்கத்தக்கது. தமிழ்ப்புலவர்களை ஆதரித்த வேளாளப் பிரபுக்கள் பல்லோர் என்பது வெளிப்படை. (29)

—வல்லமைசேர்
**மைம்மா முகிலுலகை வாழ்விக்கு மேன்மைபோற்**
**கைம்மா றிலாதளித்த கற்பகக்கை—**

(கு - ரை.) முகில் உலகை வாழ்வித்தலைத் திருக்குறள் “வான் சிறப்பு” அதிகாரத்தால் உணரலாம். மை - கருமை. மா-பெருமை.

இனி, மா - கருமையெனக் கொண்டு, மைம்மா - ஒருபொருட்பன் மொழியெனவுமாம். கைம்மாறு - பிரதியுபகாரம். "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட், டென்னாற்றுங் கொல்லோ வுலகு" என்ற குறள் கருத்து வந்துள்ளது. வேளாளர் ஒப்புர வறிந்து ஒழுகுபவர் என்பது தேர்ந்தது. (30)

—சும்மையார்

**ஊருணி நீர்போ லுலகத் தவர்க்கெல்லாம்**
**பேரறிவா ளீயும்ப்ர தாபக்கை—**

(கு - ரை.) சும்மை - ஆரவாரம். ஊருணி - ஊரின் வாழ்வார் தண்ணீருண் ணுங்குளம். "ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம், பேரறிவாளன் றிரு" என்ற குறட்கருத்து அமைந்துள்ளது. இதனால், வேளாளர் உலகவாம் பேரறிவாளர் என்பதும், அவர் செல்வம் ஊருணி நீர்போல் அனைவர்க்கும் உதவுவது என்பதும் பெறப்பட்டன. ப்ரதாபம் - வடசொல்: பெருமை, கீர்த்தி என்ற பொருளது. (31)

—பாரில்

**உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே**
**கொடுக்க விசைந்த குளிர்க்கை—**

(கு-ரை.) உடுக்கை-ஆடை; உடுக்கப்படுவது என ஆடைக்குக் காரணப்பெயர்: உடு-பகுதி, ஐ - செயப்படுபொருள்விகுதி, கு - சாரியை, க் - சந்தி; இதனை, 'கை' விகுதிபெற்ற தொழிலாகு பெயராகவுங் கொள்ளலாம். அற்றங்காத்தற்கண் கை தன் மனத் தினும் முற்படுதலின் அதனை உவமை கூறினர். இனி, ஆடை நெகிழ்ந்தவனுக்கு மறைத்து மானங்காக்கவேண்டிய உறுப்பைத் தானே சென்று மறைத்து மானங்காத்தல்பற்றிக் கை உவமை கூறப் பட்டதென்னலுமாம். "உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே, இடுக்கண் களைவதா நட்பு" என்ற குறட்கருத்து அமைந்துள்ளது. இதனால், வேளாளர் சிறந்த நட்பினர் என்பது பெறவைக்கப் பட்டது. பெருநகர்ப் பிச்சையப்ப முதலியார் என்னும் வேளாளப் பிரபு தம் மனைவியாருடன் ஏகமனதாய் விருந்திட்ட பெருமை கண்டு உளமகிழ்ந்து ஒரு பெரும்புலவர் பாடிய "உடையவிழ்ந் தான் கரம் போலுநட் பென்னு முயர்மொழியின், நடையுடை யாய் மிடியுற்றுழி நண்பர்க்கு நற்றமிழ்ச்சொற், படையுடை யார்க்கு நிதியா யினைவெள்ளைப் பங்கயத்தின், பெடையுடை வேதத் தனஞ் சேர் பெருநகர் பிச்சப்பனே" என்ற பாடல் நினைவுக்கு வருகிறது. ஆங்கே - அப்பொழுதே, அந்தவிடத்தே. ஆங்கே கொடுக்க இசைந்த குளிர்க்கை என்பதற்கோர் உதாரணம்:—தனக்கு அருமைத்துணையாயிருந்த சகோதரனிறந்துபோக, அவனுடலைத் தகனஞ்செய்தற்குரிய சடங்குகளைச்செய்து நெருப்புச்சட்டியையும் மூட்டிச் சித்தமாயிருக்கையிலே, தமிழிற் சிறந்த ஒரு புலவர் மிக்கபசியோடு தன்னிடம் வருவதறிந்து, அப்பிணத்தை மூடி மறைத்து நெருப்புச்சட்டியையும் அவித்துவிட்டு, மகவினைக் கண்ட தாய்போல எதிர்சென்றழைத்துவந்து அவருக்கு உண்ணும்

படி விருந்திட்டு, தன்னுடனிருந்துண்ணும்படி அவர்சொல்லிய சொற்கடவாமல் தானுமுடனிருந்துண்டு அவருக்குத் தக்க பரிசளித்துவிடுத்தான் 'செங்கலங்கையென்னும் வாயற்பதி வடுகநாதன் என்னும்' வேளாளப்பிரபு. இவன் செயலினையறிந்துகொண்ட புலவர், "தன்னுடன்கூடப் பிறந்த வருந்துணைத்தம்பியுயி, ரங்கிலை மாண்டது தோன்றுமன் மூடிவைத் தன்னமிட்டான்; மன்னவர் போற்றிட வாழ்செங்கலங்கை வடுகனுக்குக், கன்னனுஞ் சோமனுமோ விணையாகக் கழறுவதே' என்று பாராட்டினார். (32)

—இடுக்கணினால்
**மாமறையோர் மன்னர் வணிகர் முதலாகத்**
**தாமலையா மற்கொடுத்துத் தாங்குங்கை—**

(கு - ரை.) இதனால், முதல் மூன்று வருணத்தார்க்கும் இன்பமாகிய நிலைபேறு இவ்வேளாளர் தாங்குதலால் உண்டாகின்றது என்றது பெறவைத்தபடி. 'இடுக்கணினால் அலையாமல்' என இயைக்க. 'வேளாளர் திறத்தாலே மறைவளரும் வேந்தர் முடி வளரும் வணிகருக்குப் பெருநிதிய மிகவளரும்' என்ற ஏரெழுபது கருத்து நினைக.

இனி, வேளாள சூளாமணி என்னுமோர் நூலுள் :—

—இடுக்கணினால்
மாமறையோர் மன்னரொடு வந்தடுத்த சூத்திரருந்
தாமலையா மற்கொடுத்துத் தாங்குங்கை—தேமருவும்
பொன்முடி மன்னர் புனையத் தரிக்குங்கை
அன்னர்துலா பாரத் தளக்குங்கை—நன்னயத்து

என்ற வரிகள் இடையிற்செருகலாகக் காணப்படுகின்றன என்பர். (33)

—தேமருவு
**நாவிற் புகழ்கம்ப நாடற் கடிமையென்றே**
**மாவைக் கரைத்துமுன்னே வைக்குங்கை—**

(கு - ரை.) இங்கே அறிய வேண்டிய விவரம்:—கம்பர் தொண்டைநாட்டில் ஓர் ஏழையின் மனைக்குப்போனபோது, அவன் நல்லுணவில்லாமல் மாவையே நீரிற்கரைத்து அதனை இவர் முன்புவைத்து இவரைப்பார்த்து "யானும் என்னுரிமையும் நுமக்கே அடிமை" என்று கூறி, அதனை யமுது செய்தருளுமாறு வேண்ட, அந்த மாவுணவையும் அவனது அன்புடைமைக்கு மகிழ்ந்து பருகிப்போய்ப் பின்னர் அந்நாட்டுச் சான்றோர் பலரைப் பாடி அவர்களால் பல வரிசைகள் அளிக்கப்பெற்றுப் பலவூரார்கள் அடிமைசெய்ய வாழ்ந்திருந்தார் என்பது. மற்றும், வேளாளர் கம்பருக்கு அடிமைக்குற்றேவல் புரிந்தனரென்பதை, தம்மைப் பாடிய கம்பருக்குப் பசுமந்தைகளும் எருமைகளும் ஆடையாபரணாதிகளும் கொடுத்துப் புறக்காவலாகவிருந்து பாதுகாத்து

ஆதரித்ததுமன்றித் தம் அடிமைகளுக்குள்ளே ஆள்முறையும் நாள்முறையும் வகுத்துக்கொண்டு, நாடோறும் சிற்சிலராக் அடிமைத்தொண்டு செய்வித்து வந்தனரென்பதையும் "ஏத்தளித் தாயிரம் பாடல்கொண்டே நிரையீந்தெருமைப், போத்தளித் தாடையும் பூணாரமுந்தந்து போதரவாய்க், காத்தளித் தாதரித் திட்டதல்லாமலுங் கம்பருக்கு, மாத்தளித்தாட்பட்டு வாழ்வ தன்றோ தொண்டைமண்டலமே" என்ற சதகப்பாடலால் தெளியலாம். (34)

—பாவலர்தாம்

**ஏரெழுப தோதியரங் கேற்றுங் களரியிலே**
**காரிவிட நாகங் கடிக்குங்கை—**

(கு-ரை.) இதிலறியவேண்டிய விவரம்:—கம்பர் சடையப்பப் பிரபுவின் வேளாண்குலப் பெருமையை வெளிப்படுத்துபவராய் ஏரெழுபது நூலைச்செய்து முடித்தபிறகு, அதனை அரங்கேற்று கையில், முதலியார் இடையிலே வெளியிற்சென்றிருந்தபோது விடநாகமொன்று அவரைத்தீண்ட, அவர் நூலரங்கேறுதல் தடைப்படாதிருக்கும்பொருட்டு அதனை ஒருவர்க்குந் தெரியப் படுத்தாது மறைத்துச் சபையில் வந்திருந்து விஷவேகத்தால் மூர்ச் சையடைந்தனராக, சரசுவதிகடாட்சம் பெற்றகம்பரும் அதனை யறிந்து, "ஆழியான் பள்ளியணையே யவன் கடைந்த, வாழிவரை யின் மணித்தாம்பே - பூழியான், பூணே புரமெரித்த பொற்சிலை யிற் பூட்டுகின்ற, நாணே யகல நட", "மங்கையொருபாகன் மணி மார்பிலாரமே, பொங்குகடல்கடைந்த பொற்கயிறே-திங்களையும், சிறியதன்மேலூருந் தெய்வத் திருநாணே, ஏறிய பாம்பே யிறங்கு", "பாரைச் சுமந்த படவரவே பங்கயக்கண், வீரன் கிடந் துறங்கு மெல்லணையே, ஈரமதிச்,செஞ்சடையான் பூணுந் திருவா பரணமே,நஞ்சுடையாய் தூர நட" என்று மூன்று வெண்பாக்களைப் பாடி, அஷ்டமகாநாகம் முதலான சர்ப்பங்கட்கும் அதிபதியாகிய ஆதிசேஷனைப் பிரார்த்தித்தவுடனே, அங்கு ஒருபுற்றிலிருந்து ஒருசர்ப்பம் வெளிப்பட்டு வந்து யாவரும் அதிசயிக்கும்படி முதலி யாரைக்கிட்டி முன்புகடித்த வாயிலே மறுபடிகடித்துத் தலைக் கேறின விஷத்தை மீட்டுக்கொண்டுசெல்ல, சடையப்பமுதலி யாரும் மூர்ச்சைதெளிந்து அறிவுபெற்றெழுந்தனராக, கம்பர் ஏரெழுபதை யரங்கேற்றி, பின்பு, உடனே இயற்றிய திருக்கை வழக்கமென்ற இந்நூலில், இவ்விஷயத்தை இக்கண்ணியால் பாராட்டிக்கூறினர் என்பது. இனி, ஏரெழுபது அரங்கேற்று கையில் சடையப்பவள்ளலுடனிருந்துகேட்ட புதுவைச் சேதி ராயன் என்னும் ஓர் உபகாரியை விடந் தீண்ட, அச்செய்தியை இக்கண்ணி குறிப்பது என்பாருமுளர். களரி - தொழில் செய்யும் இடம். காரி - கருநிறம். (35)

—பாரறியச்

**சங்கையிட்டுத் தள்ளாமற் றன்சோற்றை வந்தவர்க்குப்**
**பங்கையிட் டிரட்சித்த பங்கயக்கை—**

(கு - ரை.) சங்கை - எண்: 'சங்கை தணிக்குங் கொட்டாரம்' என்றது சிவதருமோத்தரம். குமிழம்பட்டு என்னும் ஊரிலுள்ள வேளாளன் உலகத்திற்பஞ்சம் வந்தகாலத்து நாலூரிலிருந்த வித்துவான்களையும் வேறு தேயத்திலிருந்துவந்த வித்துவான் களையும் அப் பஞ்சம் ஒழியுமளவும் தன்னிடம் உள்ள அன்ன முதலியவற்றைக் கொடுத்து ஆதரித்தான்: மற்றும், இடையால மென்னும் ஊரில் வாழ்ந்த வேளாளப்பிரபு தன் "கடைவாயிலி னின்றியாசகர் கூப்பிடக் காதிலது, தடையாகவெம்பசியால் வருந்தாமற் றடையகற்றி, அடையாதவாசலுடையானெனும் பெயராதரித்தான்" என்ற தொண்டைமண்டல சதகத்தாலும், எத்தனைபேர் வந்தாலும், தள்ளாமற் சோற்றைப் பங்கிட்டு இரட்சித்தனர் வேளாண்பெருமக்கள் என்பது பெறப்பட்டது. ()

—பொங்கமோடு
**செம்பொன் விளைகளத்தூர் செந்நெல் விளைந்ததனை**
**நம்பிமறை யோர்க்களித்த நாணயக்கை—**

(கு - ரை.) பொங்கம் - மிகுதி; பொலிவு. பொன் விளைந்த களத்தூர் என்பது செங்கற்பட்டுக்கடுத்திருக்கும் ஊர். வயலில் பொன்விளைந்த காரணத்தால் இவ்வூர்க்கு இப்பெயர் வழங்கலா யிற்று. ஈண்டு அறியவேண்டிய விவரம்:—களத்தூரில் குடிதாங்கி முதலியார் என்பவர் தமது வயல்களில் நன்றாக விளைந்த நெல்லை யெல்லாம் அந்தணர்க்கே தானங்கொடுத்துவந்த புண்ணியத்தால் ஒரு வருடம் நெற்கதிரெல்லாம் பொற்கதிராக விளைய, அப்பொன்னையும் நெல்போலவே யடித்துக் குன்றுபோலக் குவித்து நெல்கொடுக்குமளவாகவே தானங்கொடுத்தார் என்பது. இதனை, "பொன்னெல்லையெல்லாம் பொதிப்பொதியாப் பூசுரர்க் குச், செந்நெல்லே போலச் சிறந்தளித்தான்-பன்னகத்தின், சீரார் மணியைவிலை செய்யானுஞ் செய்யகளத், தூரானுஞ் செய்கரும மொன்று" என்ற பாடலாலும் அறியலாம். இதனால் களத்தூரில தமது கழனிகளில் விளைந்த செந்நெல்லை மறையோர்க்கு அளித்து வந்த பெருமையினர் குடிதாங்கி முதலியார் என்பது பெற்றாம். நம்பி-சிறப்புக்குறிப்பது. நாணயம்-நேர்மை. (37)

—அம்பொன்
**விளைபயிரைப் பார்த்து விரைகால் புலத்தை**
**வளையமதி லிட்டு வருங்கை—**

(கு - ரை) விரைகால் புலம்-விதைத்தற்குரிய நிலம். 'நிலம் புலந்து இல்லாளின் ஊடி விடுமாதலின 'பார்த்து' என்றார். பயிர் விளைந்திருக்கும் நிலங்களைப்பார்த்தபின், இனி விதைத்தற்குரிய நிலங்களை வேலியிட்டுக் காப்பர் என்றபடி. வளைய-வரப்பின் நாற்புறமும். மதிலிடுதல்-வேலிகட்டுதல். (38)

—களமதனில்
**ஏற்கவந்த வாதுலருக் கில்லையென்னு மற்செம்பொன்**
**கார்க்கையினுன் முக்கையிட்ட கற்பகக்கை—**

(கு - ரை.) களம் - நெற்போர்க்களம். ஆதுலர் - வறியவர். கார்க்கை - கார்போன்றகை. முக்கை - மூன்றுதரம்: அறுவடை காலத்தில் களத்தில்வரும் அனைவருக்கும் மேரை முதலிய கொடுத்தலாலும், பலதேசத்து வித்துவான்களுக்கும் பெரும்பாலும் வேளாளரே பரிசுகள் கொடுத்துவந்ததாகக் கூறும் வரலாறுகளாலும் ஆதுலருக்கு ஈந்தமை நன்குபுலப்படும். ஏரெழுபதும் "போர்க்களத்தில் எதிர்நிற்பர் முத்தமிழ்தேர், பாவலோ ரிசைவல்லோர் பற்றுடைய பதினெண்மர், காவலோ ரெல்லாருங் கையேற்கும் பொருட்டாலே" என்றது. இவ்வாறு எல்லோரும் தத்தமக்குரிய ஒழுக்கங்களைச் சரிவர நடாத்துதற்கு வேளாண்குடியினரின் உதவி இன்றியமையாது வேண்டியிருத்தலால், இவர் நெறி "பெருநெறி" எனப்பட்ட தென்ப. சம்பந்தரும் "வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்குந், தாளாள ராக்கூரிற் ருன்ருேன்றி மாடமே" என்ருர். (39)

—தீர்க்கமதாத்
திருப்பருத்திக் குன்றிற் சிவனு லயங்கள்
விருப்புடனே கட்டுவித்த மெய்க்கை—

(கு - ரை.) தீர்க்கமதா - நிச்சயமாக. திருப்பருத்திக்குன்றம் - இது ஜினகஞ்சிஎன வழங்கப்படும். காஞ்சி நகருக்குத் தென் மேற்கே வேகவதி ஆற்றின்கரையில் இந்தத் திருப்பருத்திக் குன்றம் இருக்கிறது. இந்தியாவின் எல்லாப் பாகங்களிலிருந்தும் ஏராளமான ஜைன யாத்ரீகர்கள் இங்குள்ள ஸ்ரீமகாவீர வர்த்தமான ஸ்வாமியைத் தரிசிக்க வருகின்றனர். இங்ஙனம், சைன ஆலயங்களிற் சிறந்த இந்தத் திருப்பருத்திக்குன்றத்தில் சிவனுலயங்கள் கட்டினர் வேளாண்பெருமக்கள் என்று இக் கண்ணி கூறுகின்றது. 'சினனுலயங்கள்' என்று பாடமிருக்குமோ எனச் சங்கிப்பார்க்கு முன்பின்நோக்க ஈண்டைக்கு அப்பாடம் பொருந்துவதொன்றன்று எனலாம். சிலர் 'விருப்புடனே கட்டுவித்த' என இருத்தலால், வெறுப்பின்றிச் சினனுலயங்களையும் சைவவேளாளர் கட்டுவித்தனர் எனக்கொள்ளலாம் என்றும், அது சமயசமரசப்போக்கைக் காட்டுவதென்றும் கூறுப. பொருந்து மேற் கொள்க. [ஈண்டு, ராஜராஜசோழன் நாகபட்டினத்துப் புத்த விஹார அமைப்புக்கு உதவியமை நினைக.] 'விருப்புடனே கட்டுவித்து வீறுங்கை' என்ற பாட முண்டு. அப்பாடத்தில் 'திருப்புகழை' என மேல் காய் முன் நிரை வருதலின் அது தகாது எனக்கூறி, 'மெய்க்கை' என்ற பாடங் கொண்டனர்: இனி, 'விருப்புடனே கட்டுவித்த வெங்கை' என்ற பாடங்கொள்ளின் சிறப்பதாக அடியேனுக்குத் தோன்றுகிறது. 'வெம்மை வேண்ட'லாதலின் 'வெங்கை' என்பது கூறியதுகூற லாகாது முன்னருள்ள 'விருப்புடனே' என்றதை வலியுறுத்திநின்றது:விதப்புக்கிளவி வேண்டியது விளக்குமன்ருே. 'குன்றில்' என்பதைக் 'குன்றுசூழ' எனப் பொருள்காணல் இழுக்கன்று. மடத்திட்ட தீத்தழல் என்றவிடத்து மடப்புறம்பு குறித்தல் நோக்குக. (40)

—திருப்புகழை
எண்ணை யெழுத்தை யிசையை யிலக்கணத்தை
வண்மைபெற வுண்டாக்கும் வாகுளகை—

(கு - ரை.) எண் என்பது - தருக்கநூலுக்கும், எழுத்து என்பது - இலக்கணநூலுக்கும் பெயராம். (அதனை, "எண்ணு மெழுத்துங் கண்ணிவை யாய்ந்திந் நூற்பயனைக், கண்ணுக காண் பார் நற்கதி", "காண்டலனுமானம் கதையருத்தாபத்தியிவை, ஈண்டிசைத்த வெண்ணெனவேயெண்", "வழுப்பதத்தை வாக்கி னுக்கு மாற்றி வரமாக்கும், எழுத்தெழுவாயைந்து மெழுத்து" என்னும் பரமததிமிரபானுத்திருக்குறள்களாலுணர்க.) "காணு தம் பாணிநீயஞ்ச ஸர்வசாஸ்த்ரோபகாரகம்" என்னும் வடநூன் மேற்கோளாலும், தர்க்கவியாகரணங்கள் கற்கும் நூல்களெல்லா வற்றிற்கும் கருவியாதலை அறிக. இங்ஙன் தருக்கமே பிரதான மாக இருப்பதால், தருக்கத்தைக் கணிதத்திலடக்கி, எண் என்பது கணிதம் என்றார் புரிமேலழகர்.

"எண் - கணிதம்: அது - கருவியும், செய்கையும் என இரு வகைப்படும்; அவை ஏரம்பம் முதலிய நூல்களுட் காண்க. எழுத்து எனவே, அதனோடு ஒற்றுமையுடைய சொல்லும் அடங் கிற்று. இவ்விருதிறமும் அறமுதற்பொருள்களைக் காண்டற்குக் கருவியாகலின் கண்ணெனப்பட்டன" என்ற பரிமேலழகர் உரைக் கூற்று ஈண்டு நினைக்கத்தக்கது. எண் - ஆராய்ச்சி: முதனிலைத் தொழிற்பெயர்: இது ஆராய்தலையுடைய நூலுக்கு ஆகுபெயர். எழுதப்படுவது, எழுத்து; இதுவும் - அதனிலக்கணத்துக்கு ஆகு பெயராம். இசை-சங்கீதசாஸ்திரம். 'இலக்கணத்தை' என்றது- சங்கீதத்தின் லட்சணங்களை என்றபடி; என்னை? முன்னை 'எழுத்து' என்றது இயலிலக்கணங்களைக் குறித்ததாகலின். இனி, 'எண்ணை எழுத்தை' என்றதால் இயற்றமிழையும், 'இசையை' என்றதால் இசைத்தமிழையும், 'இலக்கணத்தை' என்றதால் அழகுமிக்க நாடகத்தமிழையும் [இலக்கணம்-அழகு] குறிப்பதாக் கொண்டு முத்தமிழ்வித்தகரைப் போற்றுதலின்மூலம் அந்த முத் தமிழையும் உண்டாக்குகின்றனர் வேளாண்பிரபுக்கள் என்ற படியுமாம். இங்ஙன், எண் எழுத்து இசை இலக்கணங்களை வளம் பெறவுண்டாக்குதலால் 'திருப்புகழை' உண்டாக்குகின்றனர் என்க. திரு-மங்கலம் குறிப்பது. உயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற்பதொன்றில்லாகலின், அதனை விளைவிக்கின்றனர் என்றார். அதனால் அவர் கை 'வாகுளகை' யாயிற்று. வாகு - ஒளி, ஒழுங்கு (Propriety), சாமர்த்தியம். உள - உள்ள. இடைக்குறை. வேளா ளப்பிரபுக்கள் பல துறைப் புலவர்களையும் ஆதரித்து அன்னார் மூலம் நூற்றுறைகளைப் பெருக உண்டாக்கியமை பிரசித்தம். (41)

—பண்ணமைந்த
வேதமொரு நான்கினையு மிக்கதமிழ் நாலடியால்
ஓதியுரைத் தேகருணை யோங்குங்கை—

(கு - ரை.) இது நம்மாழ்வாரைக் குறிப்பது. இவர் வேளாள வருணத்தினர். இவர் பாடியருளிய திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி என்ற நான்கு பிரபந்தங்களும் முறையே இருக்கு யஜுஸ் அதர்வணம் சாமம் என்ற நான்கு வேதங்களின் ஸாரார்த்தத்தை வெளியிடுவனவாம். இவற்றுள், திருவாய்மொழி, "ஓதும் குருகையர்கோன் யாழினிசை வேதத்தியல்", "இசை, கூட்டி வண்சடகோபன் சொல்லமை, பாட்டோராயிரம்", "பண்டலையிற் சொன்ன தமிழாயிரம்", "செயிரில் சொல்லிசை மாலையாயிரம்", "பண்கொளாயிரம்" என்று பலவாறு போற்றப்படுதலால் 'பண்ணமைந்த வேதம்' என விதந்தோதப்பட்டதெனலாம். திருவாசிரியம் நாலடியிகப்பினும், மிகுதிபற்றி 'நாலடியால்' எனப்பட்டது, செட்டித்தெரு, கமுகந்தோட்டம் என்பதுபோல. 'ஓதி' என்ற சொல்லாற்றலால் நம்மாழ்வார் வாய்மொழி வேதமாயிற்றென்றபடி. அவர் ஓதியது பிரபந்நர் கருக்குழியிற் புகாவண்ணங் காத்து ஈடேற்ற வாகலின் 'கருணை' என்றது, நிர்ஹேதுக கிருபையைக்காட்டிற்று. 'ஈன்ற முதல்தாய் சடகோபன்' என்ற பட்டர் அருள்வாக்கும் நோக்குக. இந்தக் கண்ணி கொண்டும் சடகோபரந்தாதி பாடியமைகொண்டும் கம்பரை வைணவரென்றே சாதிப்பாருளர். ஸ்ரீ ஆறுமுகநாவலர் பதிப்பு உட்பட எல்லா திருக்கைவழக்கப் பதிப்புக்களிலும் இந்தக் கண்ணியிருப்ப,தொழுவூர் ஸ்ரீ வேலாயுத முதலியார் பதிப்பில் இக்கண்ணி விடுபட்டிருக்கிறது என்று திருமணம் செல்வகேசவராய முதலியார் குறித்துள்ளார். (42)

—பூதலத்திற்

**பாவல னெச்சிற் படுமாங் கனியையெடுத்**
**தாவ லுட னன்ரு வருந்துங்கை—**

(கு - ரை.) புலவனெச்சிற்படுத்திய மாங்கனியை வெறுப்பின்றி விருப்புடன் உண்டான் ஓர் வேளாண்மகன் என்றதால் புலவோரை மகிழ்விப்பதில் ஊற்றமும், அவர் போனகம் செய்த சேடம் புனிதமென்ற மனப்பண்பும் உடைமை பெறவைக்கப்பட்டது. இதன் விவரம் வந்தவழிக் காண்க. (43)

—காவலவன்

**மண்ணிற் கடலின் மலையிற் பெரியதென**
**எண்ணியெழு திக்கொடுத்த வேற்றக்கை—**

(கு - ரை.) இது வேளாளர் மரபிலுதித்த சேக்கிழார் பெருமானைப்பற்றியது. **விவரம்:—**ஒருநாள் சோழமன்னன் தன் சபையிலுள்ளோரைப்பார்த்து 'பூமியிற்பெரிது, கடலிற்பெரிது, மலையிற்பெரிது' எதுஎது என்று கேட்டு மறுநாள் விடைசொல்ல வேண்டுமென்ன, அச்சோழ சபையில் உத்தியோகத்திலேயிருந்த தந்தையார் வீட்டுக்குவந்து சிந்தனையிலாழ்ந்திருப்ப, மகனாகிய சேக்கிழார் அது கண்டு, மிக எளிதில் அவற்றிற்கு விடையாகத் திருக்குறளிலிருந்து பின்வரும் மூன்று குறட்பாக்களையும்

சொல்லித் தந்தையாரை வியக்கவைத்தார். அக்குறட்பாக்கள் முறையே:—"காலத்தி னுற்செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப் பெரிது": "பயன்றூக்கார் செய்த வுதவி நயன் றூக்கின், நன்மை கடலிற் பெரிது"; "நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம், மலையினும் மாணப் பெரிது" என்பன. இதனுல், சேக்கிழார் இளமையிலேயே கல்வியில் மேம்பட்டு விளங்கினுர் என்பது பெறப்பட்டது. இந்த வரலாற்றையொட்டிச் சபாபதி நாவலர் தமது சிதம்பர சபாநாத புராணத்திலே "ஞாலமலை கடல்தன்னிற் பெரியதெது எனவெடுத்து ஞால மாள் செங், கோலனந பாயன்வின வியமுத்தி றக்குறிப்பைக் குறிப்பினேர்ந்து, சாலவுயர் திருக்குறண்மூன் றிறையாக வெழுதியவனரசு தாங்கி, வாலறிவாற் றிருத்தொண்டர் புகழ்விரித்த சேக்கிழார் மலர்த்தாள் போற்றி" என்று துதித்துப்பாராட்டியிருத்தலையும் நோக்குக. காவலவன் - அநபாயசோழன். என - எது என என்றபடி. (44)

—திண்ணமதாய்

வையகமெங் குந்தேடி வந்ததமி ழோன்புகழச்
செய்ய முடி யைக்கொடுத்த செம்பொற்கை—

(கு - ரை.) முடி - தலை. இது, குன்றையூர் எல்லன் என்னும் பிரபுவின் தலையை ஒருபுலவன் கேட்கையில் அவருள்ளங்களிக்க மகிழ்ந்து தன்தலையை யறுத்துக்கொடுத்தார் என்பது கதை. இதனை "எல்லன் என்னும் பிரபு அறநெறியன்றிப் பிறநெறி செல்லானுதலின், சொன்ன சொல்லை மறுத்துரையாமல் தனது தலையையரிந்துகொடுத்தான்: இச்செயல் புறவின்பொருட்டுத் தனது உடற்றசையையரிந்து கொடுத்த சிபியின் செயலினும் சீரிதன்றே" எனப்புகழ்ந்தது தொண்டைமண்டலசதகம். மற்றும் அச் சதகமே "......தலை கொடுத்தோனும் ......அனையோருளார் தொண்டைமண்டலமே" என இவன் செயலைப் பாராட்டியுள்ளது. மற்றுமோர் பிள்ளைத்தமிழ் தாலப்பருவத்தில் "தலையிந்தா வெனுமைந்தா தாலோ தாலேலோ, தரைகுன்றைப் பதியெல்லா தாலோ தாலேலோ" என இச்செயல் பாராட்டப்பட்டுள்ளது. வையகமெங்குந் தேடிவந்த தமிழ்ப்புலவன் குன்றையூர் எல்லனை அண்டியதற்கும் ஓர் மேற்கொள் வெண்பா காட்டலாம்: அஃது பின் வருமாறு:—"ஆலெங்கே யங்கே யரும்பறவை யாற்றுயிலும், மாலெங்கே யங்கே மலர்மடந்தை—சோலைதொறும், செங்கே தகைமணக்குஞ் செங்குன்றை யெல்லனெங்கே, அங்கே யிரவலரெல் லாம்" என்பது. (45)

—துய்யபுகழ்

அட்டதிக்கு மெண்கீர்த்தி யாயிரத்தெட் டானைதனை
வெட்டிப் பரணிகொண்ட வீரக்கை—

(கு - ரை.) இது, வன்னியனுயினும் வேளாண்மையின் மிக்க கருணுகரத்தொண்டைமானைக் குறிப்பது. இவன் முதற்குலோத் துங்கன்படைத்தலைவனுய்க் கலிங்கத்துச்சென்று பலயானைகளை வெட்டிவீழ்த்தி மற்றும்பல யானைகளைச் சிறைபிடித்து வென்றி

யொடுவந்தமையைக் கலிங்கத்துப்பரணி கொண்டறியலாம். பரணி கொண்டவன் குலோத்துங்கனுயினும் அவன் படைத்தலைவனுக்கும் ஏற்குமெனச் சொன்னபடி என்க. "ஆனை யாயிரம் அமரிடை வென்ற, மானவனுக்கு வகுப்பது பரணி" யாதலின், 'ஆயிரத்தெட்டானை தனைவெட்டிப்பரணி கொண்ட' என்றது. 'துய்யபுகழ் அட்டதிக்கும் எண்கீர்த்தி' என்றது - இசையால் திசைபோயவன் என்றபடி. இவன் செயலினைத் தொண்டைமண்டல சதகமும், "பண்டையோர் நாளையி லோரேழ் கலிங்கப்பரணிகொண்டு, செண்டையு மேருவிற் றீட்டுவித்தோன் கழற்செம்பியன்செய் தொண்டைநன்னாடு புரக்கின்ற கோனந்தித் தோன்றலெங்கள், வண்டையர் கோனங் கருணாகரன் தொண்டைமண்டலமே" எனப் பாராட்டியது. (46)

—திட்டமுடன்
பொன்னு லமுதும் பொரிக்கறியுந் தான்கொணர்ந்து
நன்னு வலர்க்களித்த நாணயக்கை—

(கு-ரை) பொன்னால்-பெற்ற பொருளால். இது, வேளாளராகிய முனையடுவார் நாயனார் என்னும் சிவனடியாரைக் குறிப்பது. முனையடுவார் போர்முனையெறிந்து தாம்பெற்ற பொருளினையெல்லாம் ஈசனடியார்க்கும் நன்னுவலர்க்கும் வழங்குவதோடு, நெய், கறி, தயிர், பால், பழம் முதலியவற்றோடு திருவமுது அளிப்பார் என்பதை "இன்ன வகையால் பெற்றநிதி யெல்லாம் ஈசனடியார்கள், சொன்ன சொன்ன படிநிரம்பக் கொடுத்துத் தூய போனகமுங், கன்னல் நறுநெய் கறிதயிர்பால் கனியுள் ளுறுத்த கலந்தளித்து, மன்னும் அன்பின் நெறிபிறழா வழித்தொண் டாற்றி வைகினர்" என்ற பெரியபுராணச்செய்யுளால் தெளிக. இதனையே ஈண்டு 'அமுதும் பொரிக்கறியும்......அளித்த' என்றது. நன்னுவலர் என்றது ஈசனடியார்க்குமாகும். 'நள்ளார்முனையெறிந்த வளங் கொடிறைவரடியார்க்கு மாறாதளிக்கும் வாய்மையார்' ஆதலின் 'நாணயக்கை' என்றது. நாணயம் - நேர்மை. (47)

—முன்னாள்
மனக்கவலை யுற்ற வணிகன்முன் னேநின்று
தனைக்கா வெனக்கேட்ட தண்கை—

(கு - ரை.) கேட்ட - கேட்க, [அவனுக்கு] உதவிய தண்கை என்க. இது ஒருகால் ஆறைநகர்மேவு பரமேசுரன் புதல்வன் எல்லன் என்பானைக் குறிப்பதாகலாம். அவனைப்பற்றிய ஆறைக் கலம்பகத்தில், 'செட்டிதன்பழி தவிர்த்தவன் பரிவுசெய்து பெண் பழிதவிர்க்கிலான்' என வருதலின். விவரம் வந்துழிக் காண்க. இனி, 15, 16-ஆம் கண்ணிகளிற் கூறியதையே திரும்பக் கூறியதாக் கொண்டாலும் இழுக்கின்று; என்னையெனில், அஃது அரும் பெருஞ் செயலென்று இம்மூலமாக வேளாளர்பெருமையை நன்கு விளக்குதற்கு என்க. இன்றும், பழையனூர்க்குச் செல்லும் வழியில் குழிமாண்டார்கோயிலையும் அதற்கு நேரெதிரே ஸ்ரீ சாக்ஷி

பூதேஸ்வரர் கோயிலையும் தரிசிக்கலாம். 'தங்கக்கை' என்றபாடம் உண்டு. அது, மேல்வரும் 'கனக்கவே' என்ற சீரோடு ஒன்ற வெண்டளை தட்டுதலின், 'தண்கை' என்ற பாடங் கொண்டாரு முளர். அதனையே இங்குக் கொண்டேன். இனி 'திண்கை' என்றும் இருக்கலாம். (48)

—கனக்கவே

*அன்றீன்ற நாகெழுப தானவெரு மைத்திறத்தைக்*
*கன்றோடு நல்குங் கடகக்கை—*

(கு - ரை.) நாகு - எருமையிற் பெண். எழுபதான எருமை நாகு என மாறுக. திறம் - கூட்டம், மந்தை; herd. அன்றீன்ற கன்றோடு நல்கும் எனக்கூட்டுக. வேளாளர் தம்பாலுள்ள பசு மந்தைகளையும் எருமைகளையும் புலவர்க்குக் கொடுப்பரென்பதை "நிரையீந் தெருமைப்போத்தளித்து......வாழ்வதன்றோ தொண் டைமண்டலமே" என்ற சதகச்செய்யுளாலும் தெளிக. கடகம் - கங்கணம்: Bracelet, armlet: இனி, கைக்குக் கடகம், இயற்கை யடைமொழியுமாம். கனக்கவே நல்கும் என இயையும். கனக்க - மிகுதியாக. (49)

—வென்றிதரும்

*ஓரானை நூறா யிரக்கலநெல் லோர்கவிக்குச்*
*சீராக நல்குந் தியாகக்கை—*

(கு - ரை.) ஒருகவிக்கு ஒருயானையையும் ஒருலக்ஷம் கலம் நெல்லையும் கொடுப்பர் என்றதால் யானையின் பராமரிப்புக்கேற்ற நிலபுலங்களையும் வழங்குவர் என்பது பெறப்படும். யானையைக் கொடுப்பதுண்டென்பதை "உலைக்குரிய பண்ட முவந்திரக்கச் சென்றால், கொலைக்குரிய வேழங் கொடுத்தான் - மலைக்குரிய, வாணர்கோ னுறை மகதேவன்" என்று ஏகம்பவாணனைப்பற்றிக் கூறியவிடத்தானும் உணர்க. (50)

—பேரியலைச்

*சாற்றுமொட்டக் கூத்தன் சரசகவி சொல்லப்பா*
*லாற்றுநீர் காற்கொணர்ந்த வாண்மைக்கை—*

(கு - ரை.) இயல் - இயற்றமிழ்; அதாவது, இலக்கணமரபு பிறழாத செய்யுள் உரைநடை நூல்கள். கால் - வாய்க்கால்: Irrigation channel. சரசகவி = பரிகாசமான பாட்டு. இந்தக் கவி யாதென விளங்கவில்லை. ஒருகால் ஒட்டக்கூத்தன் வாய்க்கால் களால் சோணாட்டை வளம்படுத்தும் காவிரியைப் புகழ்ந்து, தொண்டைநாட்டிற் பாயும் பாலாற்றை அத்தகைய வாய்க்கால் களில்லாமைகண்டு சரசகவி மூலம் கேலி செய்திருக்கலாமோ எனத் தோன்றுகிறது. அங்ஙன் கூத்தன் சரசகவி சொல்லவே, வேளாளப்பெருமக்கள் பாலாற்றின் நீரைக் கால்வாய்கள் வெட்டி அவற்றின் மூலம் பாயச்செய்து தொண்டைநாட்டை வளம் பெறச்செய்த வீரமுடையவர் எனப்பெறவைத்தபடி. எனவே,

''பாலாறு வளஞ்சுரந்து நல்கமல்கும் பாலைவிரிமணங்கமழ் பூஞ் சோலைதோறும், காலாறு கோலியிசைபாடநீடு களிமயினின்றாடு மியற்றொண்டை நாடு'' என்று உமாபதி சிவாசாரியர் பிற்காலத் துப் போற்றும்படியாயிற்று வேளாளர்செய்த அருஞ்செயலால். ()

—நேர்த்திபெற

**வண்டமிழோன் றானுதைத்த வாகுளகா லுக்குப்பொன்**
**வெண்டயமிட் டேவணங்கும் வெற்றிக்கை—**

(கு - ரை.) வாகு - அழகு: இங்கே இகழ்ச்சிக் குறிப்பினது. வெண்டயம் - காலணி, கட்டைவிரல் மோதிரம். இங்கே அறிய வேண்டிய விவரம் :—வல்லமென்னும் ஊரில் வாழ்ந்த கச்சியப்பன் என்னும் பிரபு பல்லக்கிலேறிப்போம் வழியிலே துடுக்கான வீரன் என்னுமொருபுலவன், தன்னைக்கண்டும் இறங்காமற் பல்லக்கிலேயே சென்றதற்காக அந்தப் பல்லக்கையிறக்கச்செய்து உள்ளேயிருந்த பிரபுவை வில்லைச்செருப்பையணிந்த தன்காலினால் உதைத்தான்: அப்பிரபு சிறிதும்கோபிக்காமலும் வெறுக்காமலும் பொறுத்து அப்புலவனுக்குப் பணிவுடன் உபசாரஞ்செய்து ஒரு பல்லக்குங்கொடுக்க, அப்புலவன் அப்பிரபுவை மிகப்புகழ்ந்து ''பல்லக்கிலேயன்றி மண்படுமோ'' என்னும் பாடலைப்பாடினான். அப்பிரபுவாகிய கச்சியப்பனும் தொண்டைமண்டலத்து வேளாண் பெருமகனவன். ''மண்படுமோ வெய்யிலிலே வாடுமோ புல்லரிரு, கண்படுமோ வன்பாகக் கற்றவர்கள்—மண்புகழ, மெச்சியப்பா லும்புகழும் வீறுவல்லை யாளவந்த, கச்சியப்ப னையுதைத்த கால்'' என்ற வெண்பா அவர் பெருமை குறிக்கும். ஈண்டு, ''வில்லைச்செருப் பிட்ட காலாலுதைத்து வியனுலகில், சொல்லற்கரிய புகழ்கொடுத் தோன்றுட்ட வீரன்றன்னற், பல்லக்கிலேயன்றி மண்படுமோ வெனும்பாடல் கொண்ட, வல்லப்பதிக்கச்சியப்பனும் வாழ் தொண்டை மண்டலமே'' என்ற சதகப்பாடலையும், ''உதை கொடுக்க மார்கொடுத்தோனும் அனையோருளார் தொண்டை மண்டலமே'' என்ற வரியையும் நோக்குக. 'பொன் வெண்டய மிட்டே வணங்கும்' என்றது-அவன் புலவனுக்குப் பொதுவாகச் சிறப்புச்செய்தபடி குறிப்பது என்க. (52)

—புண்டரிகக்

**கையாற் புலவன் கனகமுடி மேற்குட்டச்**
**செய்யாழி பண்ணியிட்ட தீரக்கை—**

(கு - ரை.) புண்டரிகம்-தாமரை. செய் ஆழி-செவ்விய மோதிரம். கனகமுடி-சிறந்த தலை என்றபடி. குட்டின கைக்கு மோதிரம் இட்ட தீரர் வேளாண்மரபினர் என்றபடி. விவரம் வந்துழிக் காண்க. (53)

—நொய்ய

**எறும்புக்கு மாஸ்பதந்தா னில்லையென்ற மட்டிற்**
**றிறம்புக்க யானைதருஞ் செங்கை—**

(கு-ரை.) நொய்ய-அற்பமான. ஆஸ்பதம்-ஆதாரம் (Support); இது வடசொல்: இதனை 'ஆற்பதம்' எனத் திருத்திக் கொண்டாருமுளர்: அருணகிரியார் திருப்புகழில் "சரணாஸ்பதமருள்வாய்" என அப்படியே அமைத்திருத்தல் நோக்கத்தக்கது. இங்குக்குறிப்பது-எறும்புக்கு உணவிடுமாறு கூட ஒரு அரிசியேனும் என்னிடம் இல்லை என்று புலவன் கூறியவுடனே மந்தையிற் புகுந்திருந்த [மந்தையாக விருந்த] யானையைத்தருகின்ற வண்கையினர் வேளாளர் என்றபடி. இஃது, சிறிது கேட்பப் பெரிது ஈயும் அவர் வள்ளன்மை குறிக்கும். "சேற்றுக் கமலவயற் றென்னுறை வாணனையான், சோற்றுக் கரிசிதரச் சொன்னக்கால்—வேற்றுக், களிக்குமா வைத்தந்தான் கற்றவர்க்குச் செம்பொன், அளிக்குமா றெவ்வா றிவன்" என்னும் ஏகம்பவாணனைப்பற்றிய பாடலை நினைக. ஆய்அண்டிரனாகிய வேளாள வள்ளலைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். திறம்-மந்தை. (54)

—பறம்புதனில்

எண்ணா யிர முனிவர்க் கேற்றபடி யப்படியே
பண்ணாக் கொடுக்கும் பராக்ரமக்கை—

(கு-ரை.) 'பறம்பு' என்றதால் வேள் பாரியைக் குறிப்பதாக் கொள்க. [வேள் என்பது வேளாளர்பெற்ற சிறப்புரிமைப் பெயர்]. முந்நூறு ஊரையுடைய பறம்புநாட்டைப் பரிசிலர்க்கு ஈந்தனன் என்பதைப் புறநானூறு செய்யுள் (110) கொண்டு தெளியலாம். அஃதேபோல் தன்னையண்டிய பல அந்தணர்களுக்கு அவர்கள் பெருமைக்கேற்றபடி அவர்கள் விரும்பிய அளவுப்படியே தகுதியாகப் பொருள்களைக் கொடுத்த வீரக்கையினன் பாரி என்றபடி என்க. முனிவர்-அந்தணர்: கபிலர் என்ற புலனழுக்கற்ற அந்தணாளரும் பாரிபால் நட்புரிமை பூண்டிருந்தமை யோர்க. எண்ணாயிரம் என்றது மிகுதிகுறிக்கவந்த ஒருபேரெண். அப் படி - [அவர்விரும்பிய] அவ்வளவே: படி-அளவு. பண்ணா - தகுதியாக, வரிசையறிந்து என்றபடி: பண்-தகுதி. பராக்ரமம் - வீரம்: "கடந்தடு தானை மூவிருங்கூடி, உடன்றனி ராயினும் பறம்பு கொளற் கரிதே" என்ற கபிலர் வாக்குக்கொண்டு பாரியினது வீரம் ஓர்க. (55)

—விண்ணாடர்

கூர்த்த புகழண்ட கோளமள வும்படர
நாற்றிக்கு மேருவினி னாட்டுங்கை—

(கு - ரை.) நாற்றிக்கும் அண்டகோளமளவும் விண்ணாடர் கூர்த்தபுகழ் படர மேருவினில் நாட்டுங்கை எனக்கூட்டுக. எல்லாத்திக்கிலும் வானத்திலும் தேவர்புகழ் பரவுமாறு இவ்வுலகத்து மேருவில் புகழ்க்கொடி நாட்டியவர் வேளாளர் என்றபடி. நிலவுலகத்தாரை உணவு உண்ணச்செய்தலோடு, அந்நிலவுலகத்தார் செய்யும் யாகங்களிற் கொடுக்கப்படும் அவிர்ப்பாகமூலமாகத் தேவர்களையும் திருப்தி செய்து பாதுகாத்தலால், அத்தேவர்கள்

புகழையும் குன்றாது நாட்டிப் படரச்செய்பவர் வேளாளர் என்பது தேர்ந்த கருத்து. மேருவில் [கொடி] நாட்டுதல் என்பது எல்லாருங்காணப் பரப்புதற்கு ஓர் வழக்கு. விண்ணுடர் - தேவர். கூர்த்த-'கூர்' என்ற உரிச்சொல்லினடியாப்பிறந்த பெயரெச்சம். 'நாற்றிசைக்கு' என்ற பாடம் சில பதிப்பிற் காண்கின்றது. (56)

*—சீர்க்குகனை*
*ஆதார மானவனை யைங்கரனைச் சங்கரனைப்*
*பாதார விந்தம் பணியுங்கை—*

(கு - ரை.) குகனை - குகனுக்கும், ஐங்கரனை - கணபதிக்கும், ஆதாரமானவனை - தோற்றக்காரணமாயிருந்த சிவபிரானை எனப் பொருள் செய்க. அஞ்ஞான்று, மேல், 'சங்கரனை' என்பதோடு இயைந்து பொருள் சிறக்கும். இனி, மூவரையும் பணியுங்கை எனினுமாம். பாத அரவிந்தம் - திருவடித்தாமரைகள். இது, வேளாளரின் சைவப்பற்றுக் குறித்தது. (57)

*—நீதி*
*நடக்கை யிருக்கை நகைக்கை மிடிதீர்க்கை*
*கொடுக்கை செழுங்கை குளிர்க்கை—*

(கு - ரை.) நீதிநடத்துதல், நீதிதங்குதல், நீதி விளங்குதல், மிடிதீர்த்தல், ஈதல், இவற்றால் செழித்த கை எனப்பொருள் காண்க. 'நீதி' என்ற சொல் மேனின்ற 'கை' விகுதிபெற்ற மூன்று தொழிற்பெயர்களோடும் இயைந்தது. நகைக்கை - ஒளிர்தல். நகை - ஒளி: "நகைதாழ்பு துயல்வரூஉம்" (திருமுருகு: 86). மிடி- வறுமை: "மண்ணவர் வறுமைநோய்க்கு மருந்தன சடையன்" என்ற கம்பன் வாக்கும் நினைக. தீர்க்கை, கொடுக்கை-இரண்டும் 'கை' விகுதிபெற்ற தொழிற்பெயர்களே. நீதிநடக்கை யிருக்கை நகைக்கை - இதனை முன்னர்வந்த 15, 16, 17 கண்ணிகளால் தெளியலாம். மிடிதீர்க்கை கொடுக்கை என்பவற்றைப் பின்வருமாற்றான் தெளியலாம்:—இரவலர்க்கு உணவு பசும்பொன் மணி அணி ஆடை கொடுத்து, பின்னும் லச்சையுடையவராய்த் தமக்கு வேண்டியவற்றை வாய்திறந்து கேட்கக் கூசுவோரு மிருப்பரென்றெண்ணி, அவர் மனத்தில் கருதியவற்றை எழுதும்படிசெய்ய முற்றத்தில் மணலைப் பரப்பிவைத்து அவ்விரவலர் எழுதுமட்டும் வீட்டினுள் மறைந்திருந்து பின்வெளிவந்துபார்த்து அவர்கள் எழுதினபடியே கொடுக்குங் கொடையாளனாகிய மாகறல் ஊரினனாகிய புண்யகோடி யென்னும் வேளாண்பிரபுவின் வரலாற்றால் அறியலாம். மற்றும், பஞ்சம் வந்த காலத்து அப்பஞ்சம் நீங்குமளவும் நாலூரிலிருந்த புலவர்களுக்கும் வேறு தேசத்திலிருந்துவந்த நாவலர்க்கும் அவர் விரும்பியபடியே அன்னம் முதலியன இட்டு ஆதரித்து, நாடு செழித்த பின் அவர்களுக்குத் தக்க பரிசளித்தனுப்பிய குமிழம்பட்டு ஊரினராகிய வேளாண்பிரபுவின் வரலாற்றாலும் அறியலாம். "உணலைப்பசும்பொன் முதலான

வற்றை யுதவிப்பின்னும், குணலச்சை யுள்ளவர் கேட்கவுங் கூசுவர் கொல்லெனவே, எணலேக் கருதியெழுதிவைப்பீரென வின்மறைந்து, மணலேப்பரப்பிய முன்றிலுளான்தொண்டை மண்டலமே"; "கோலூருழவுக் குடியானவன்றன் குமிழம்பட்டு, வேலூர்க்கிழானொரு வேளாளன் பஞ்சம் விடியளவும், நாலூரி லுள்ள புலவோர்க்குந் தேசத்து நாவலர்க்கு, மாலூரிலன்னங் கொடுத்தளித்தான் தொண்டைமண்டலமே" என்பது சதகம். செழும் கை - மேற்குறித்த ஐந்தொழில்களாலும் வளமுற்ற கை. எனவே, குளிர்க்கையாயிற்று. குளிர்க்கை - இனியதாகுங்கை. குளிர்தல் - கண்முதலியபொறிகளுக்கு இனியதாதல். (58)

—தொடுத்ததெல்லாஞ்

**சீராக வுண்டாக்குஞ் செங்கைப் பெருங்கருணைக்**
**காராளர் கற்பகப்பூங் கை.**

(கு - ரை.) தொடுத்தது-புலவர் வளைத்துக் கேட்டது. தொடுத்தல் - வளைத்தல்: "தொடுத்துங் கொள்ளா தமையலென்"என்ற புறம் காண்க. (செ: 164). தொடுத்ததெல்லாம் - ஒருமைப்பன்மை மயக்கம். தொடுத்ததெல்லாம் சீராகவுண்டாக்குஞ் செங்கை என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு:—வல்லாளன் என்னுமொரு வேளாண் பிரபு அரசன் அழைக்க அவன் சபைக்கு விரைந்து வந்துகொண்டிருக்கும்போது இடைவழியிலே ஓர் புலவன் தடுத்துத் தனக்கு உடுக்க உடையில்லை யென்றிரக்க, அதுகேட்டு அவனை மனைக்கு வரும்படி சொல்லமனமில்லாது, உடனே தான் உடுத்திருந்த ஆடைகளைக் களைந்து கொடுத்துவிட்டு, அருகிலிருந்த குளத்தினீரி லிறங்கித் தங்கியிருந்து, கரையிற்போவாரை யழைத்து ஆடை கொணர்வித்து உடுத்திக்கொண்டு அரசவைக்குச்சென்று புகழ் பெற்றார். இதனை "உளத்துத் தையயற்றவோர்புலவோனுக் குடையுதவிக், குளத்துப்புனலை யுடுத்துநின்றே பின்பு கூவிய வைக், களத்துப்புகுதக்கலையுடுத்தேகரையேறிவந்த, வளத்துப் புகழ்பெற்ற வல்லாளனுந் தொண்டைமண்டலமே" என்ற சதகச்செய்யுளாலறிக. இவ்வாறு, மேல் 58 கண்ணிகளிலுங் குறித்துள்ள பெருமைகளைக் கொண்டிலங்குங் கை யாதெனில்: "பெருங்கருணைக்காராளர் கற்பகப்பூங்கை" என வினைமுடிபு செய்க. காராளர் - வேளாளர். இவர் கையின் சிறப்பினை, "மேழி பிடிக்குங்கை வேல்வேந்தர்நோக்குங்கை, ஆழிதரித்தேயருளுங்கை —சூழ்வினையை, நீக்குங்கை என்று நிலைக்குங்கை நீடுழி, காக்குங் கை காராளர்கை" என்று கம்பர் பிறிதொருசமயம் வயலிலுழும் வேளாளனிட்ட கூழுண்டு பாடியதாலும் உணர்க. (59)

திருக்கைவழக்கம் முற்றிற்று.

———=

# வை. மு. கோபாலகிருட்டிணமாசாரியர்

## பதிப்புக்கள்

**கம்பராமாயணம்** ஆறுகாண்டங்கள் (7 - வால்யூம்) மூலம், பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்புகள், பாடபேதங்கள், அரும்பொருள் விளக்கம் இவைகளுடன் கூடியது.

**வில்லி பாரதம்** பத்துப்பருவங்கள் (7 - வால்யூம்) மூலம், மிகஎளிய பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்புகள், கதைச்சந்தர்ப்பங்கள், அரும்பொருள்விளக்கம், அபிதானசூசிகை யகராதி இவைகளுடன் கூடியது.

**திருக்குறள்** மூலம், பரிமேலழகர் உரை, பரிமேலழகருரைக்கு விளக்கமான குறிப்புரை இவையுடன்கூடியது.

**பத்துப்பாட்டு** (முழுவதும்) மூலம், பதவுரை, விசேடவுரை ஆராய்ச்சியுடன் கூடியது.

**தண்டியலங்காரம்** பொதுவியல், பொருளணியியல், சொல்லணி யியல் - மூலமும், பழையவுரையும், குறிப் புரையும்.

**அஷ்டப்ரபந்தம்** திருவரங்கக்கலம்பகம், திருவரங்கத்தந்தாதி, திருவேங்கடத்தந்தாதி, திருவேங்கடமாலை முதலியன உரையுடன்.

திருவரங்கத்துமாலை, அழகரந்தாதி, நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி, ஸ்ரீரங்கநாயகரூசல் முதலியன உரையுடன் (ஒரே பகுதியில்)

**கம்பர் இயற்றிய இதர நூல்கள் :—** சரஸ்வதியந்தாதி, சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, திருக்கைவழக்கம் முதலியன உரையுடன்.

கிடைக்குமிடம் :—

வை. மு. நரசிம்மன்

## வை. மு. கோ. கம்பெனி

17, தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை-5.